# இன்றைய அரசியல் நிலைமை பற்றிய ஒரு நேர்காணல்

சி. கா. செந்திவேல்

## இன்றைய அரசியல் நிலைமை பற்றி

# தோழர் சி.கா.செந்திவேல்

# இனியொரு (www.inioru.com)

# இணையத்தளத்திற்கு வழங்கிய

## நேர்காணல்

புதிய பூமி வெளியீட்டகம்

நூல்: இன்றைய அரசியல் நிலைமை
(நேர்காணல்)

பதிப்பு: 30-10-2009

வெளியீடு: புதிய பூமி வெளியீட்டகம்
47, 3வது மாடி,
கொழும்பு மத்திய சந்தைக்
கட்டிடத் தொகுதி,
கொழும்பு 11.

அச்சுப்பதிப்பு: வேள்ட் விசன் கிறாபிக்ஸ்

தொலைபேசி: 011 2473757, 077 9774427

விலை: ரூபா. 50

TITLE: Inraya araciyal nilaimai

Edition: 30-10-2009

Publishers : Puthiya Poomi Publishers
47, 3rd Floor
CCSM Complex
Colombo 11.

Printers: World Vision Graphics

Telephone: 011 2473757

Price: Rs. 50/=

## வெளியீட்டுரை

விடுதலைப் புலிகளின் தோல்வி தமிழ் மக்களுடைய தேசிய இன ஒடுக்கலை மேலும் மோசமாக்கியுள்ளது என்பதில் ஐயமில்லை. எனினுட் தமிழ்த் தேசியவாதிகள் தமிழ் மக்களின் இன்றைய நிலை பற்றிய எவ்விதமான அக்கறை காட்டுவ தாகவும் தெரியவில்லை. இதுவரையிலான விடுதலைப் போராட்ட நிகழ்வுகளையும் விளைவுகளையும் பற்றிப் பேசவும் விரும்பவில்லை. மீளாய்வுகள் பற்றிப் பேசுவோரிடம் 'கடந்தவை கடந்து முடிந்துவிட்டன, இனி நடப்பதைப் பார்ப்போம்' என்று நழுவுகிற போக்கு ஒரு சாராரிடமுள்ளது. இன்னொரு சாரார் பழி முழுவதையும் விடுதலைப் புலிகளின் மீது சுமத்தி விட்டுத் தங்களைப் புனிதர்களாக்குகிற காரியத்தில் தீவிரமாக உள்ள னர். இன்னொரு சாரார் தமது வழமையான புலி எதிர்ப்பில் இறுகிப்போய்ப் பேரினவாத அரசாங்கத்தின் காலடியில் விழுந்து கிடக்கின்றனர்.

இவை சுதந்திரமாகச் சிந்திக்கிறவர்களை அவமதிக்கிற போக்குக்கள். இவ்வளவு காலமும் தமிழ் மக்களின் ஒற்றுமை, விடுதலைப் போராட்டம் என்ற பேர்களில் அடக்கி வைக்கப்பட்ட கேள்விகள் ஒவ்வொன்றாக முன் வருகின்றன. பேசக்கூடாதவை என்று ஒதுக்கப்பட்டிருந்த சமூக முரண்பாடுகள் பற்றிய கேள்விகள் வேகமாக மேலெழுகின்றன. இனி என்ன செய்வது என்ற கேள்விக்குரிய விடைதேட இதுவரை என்ன செய்யப் பட்டது, அவற்றின் விளைவுகள் என்ன, போராட்ட வரலாறு கூறும் பாடங்கள் என்ன என்ற கேள்விகட்கு விடை தேட வேண்டும். எழுகிற கேள்விகளைத் தட்டிக் கழிக்காமல் பதில் கூற எந்தத் தேசியவாதிக்கும் இயலாமலுள்ளது. கடந்த காலத்தை விசாரிக்கவும் சரி பிழைகளை இனங் காணவும் இயலாத எந்தத் தலைமையாலும் எதிர் காலத்திற்கான பாதையைச் சரியாக இனங்காண முடியாது.

இந்த அரசியல் வறுமையின் நடுவிலே தான் மாக்சிச லெனி னிசம் மாஓ சேதுங் சிந்தனையை முன்னெடுக்கிற நமது

கட்சியால் எழுகிற ஒவ்வொரு வினைவுக்கும் நேர்மையாகவும் தெளிவாகவும் விமர்சனம் - சுயவிமர்சனம் என்ற அடிப்படையில் விடைகளைத் தேடியறிந்து கூற இயலுமாக உள்ளது.

"இனியொரு" (www.inioru.com) இணையத் தளத்தில் நடந்த நேர்காணலை மேலும் ஆழமான விரிவான விசாரணை யாக்குகிற விதமாகப் புதிய கேள்விகள் எழுப்பப்பட்டன. அக் கேள்விகள் இன்றைய தமிழ்ச் சமுதாயத்தினரிடையே உருவாகி வரும் ஆரோக்கியமான சிந்தனைப் போக்கை அடையாளப் படுத்துகின்றன.

இந்த நேர்காணலிலும் அதன் தொடர்ச்சியான கேள்வி பதிலிலும் ஈழத்தின் இன்றைய அரசியல் நிலைமைகள் பற்றி இலங்கையிலும் புலம்பெயர்ந்தோரிடையிலும் எழுகிற முக்கியமான கேள்விகட்கு விரிவாகவும் தெளிவாகவும் தோழர் செந்திவேல் விடையளித்ததன் மூலம் ஒரு பயனுள்ள சமகால அரசியல் ஆய்வு ஆவணம் நமக்குக் கிட்டியுள்ளது.

இணையத்தள வசதிகள் எல்லாரிடத்தும் இல்லை. எனவே இந்த அரசியல் முக்கியத்துவம் மிக்க ஆவணத்தை நூல்வடிவிற் கொண்டுவர எண்ணினோம். அதற்கு அனுமதியளித்த தோழர் செந்திவேலுக்கும் 'இனியொரு' இணையத்தள அமைப்பின ருக்கும் எங்கள் நன்றிகள்.

கொழும்பு
22.10.2009

புதிய பூமி வெளியீட்டகம்

இலங்கையின் கடந்த மூன்று தசாப்த கால பேரினவாத ஒடுக்குமுறை யுத்தம், அதன் மத்தியிலான ஆயுதம் தாங்கிய போராட்டங்கள் என்பனவற்றின் ஊடே ஒரு மாக்சிச லெனினிசக் கட்சியாகப் புதிய-ஜனநாயகக் கட்சி செயற்பட்டு வந்துள்ளது. அக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் பிரான்சைத் தளமாகக் கொண்டியங்கும் **"இனியொரு" இணையத் தளத்திற்கு (www.inioru.com)** 04-09-2009ல் ஒரு விரிவான நேர்காணலை அளித்துள்ளார். அதை இங்கு முழுமையாகத் தருகின்றோம்.

**இனியொரு: இலங்கையில் கடந்த மே 19ம் திகதியுடன் யுத்தம் முடிவுக்கு வந்து விட்டதாயும் பயங்கரவாதம் அழிக்கப்பட்டுள்ளதாயும் ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் பிரகடனப்படுத்தியுள்ளனர். அவ்வாறாயின் யுத்த முடிவிற்குப் பின் இலங்கையின் அரசியல் நிலைமை எவ்வாறு உள்ளது?**

பதில்: இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களாக நீடித்து வந்த யுத்தம் முடிவுக்கு வந்துள்ளதும் தமிழ் மக்களிடையே முன்னெடுக்கப்பட்டு வந்த ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளமையும் உண்மையே. ஆனால் அத்துடன் யுத்தம் போராட்டம் என்பனவற்றோடு சம்மந்தப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளும் முடிவுக்கு வந்துவிட்டன என்று கூறிவிட முடியாது. தேசிய இனப்பிரச்சினை யுத்தமாகவும் ஆயுதப் போராட்டமாகவும் விரிவு பெற்றுச் செல்வதற்கு அடிப்படையாக அமைந்த இன முரண்பாட்டு விரிசலும் பேரினவாத ஒடுக்கு முறையும் தொடரவே செய்கிறது. அதாவது இரத்தம் சிந்தும் யுத்தம் முடிவுக்கு வந்திருக்கிறதே தவிர இரத்தம் சிந்தாத அரசியல் யுத்தம் தொடரவே செய்கிறது. அவ்வாறே பொருளாதார நெருக்கடிகளும் அவற்றின் பாரிய சுமைகளும் அனைத்து மக்கள் மீதும் பெரும் சுமைகளாக ஏற்றப்பட்டுள்ளன.

**இனியொரு: அவ்வாறாயின் மகிந்த சிந்தனை அரசாங்கம் நீங்கள் கூறும் அரசியல் யுத்தத்தை எவ்வாறு முன்னெடுத்துச் செல்கிறது என்று கருதுகிறீர்கள்?**

பதில் : தமிழ்த் தேசிய இனததின் மீதும் அவர்களது பாரம்பரிய பிரதேசங்கள் மீதும் ஆயுத அடக்கு முறையைப் பேணிவருவதானது அரசியல் யுத்தத்தின் ஒரு பிரதான பகுதியாகும். அதே போன்று வடக்கில் மூன்று லட்சம் மக்களை முட்கம்பி முகாம்களில் அடைத்து வைத்து தண்டனைக் கைதிகளை விட மோசமாக நடாத்தி வருவதும் அரசியல் யுத்த அடிப்படையிலேயேயாகும். அத்துடன் இன்றுவரை அதிகாரப் பகிர்விற்கான எந்தவொரு அரசியல் தீர்வையும் முன் வைக்காமலே காலத்தைக் கடத்திச் செல்வதும் அரசியல் யுத்தமாகவே உள்ளது. "கிழக்கின் உதயம்" "வடக்கின் வசந்தம்" என்பன அரசியல் தீர்வை மறுக்கும் வெறும் கண் துடைப்புக்கள் மட்டுமேயாகும்.

**இனியொரு: போருக்குப் பின்பான தென்னிலங்கைச் சூழல் எவ்வாறு காணப்படுகிறது? சிங்கள மக்கள் மத்தியில் காணப்படும் மனநிலை எத்தகையதாக உள்ளது?**

பதில்: போரின் வெற்றியும் விடுதலைப் புலிகளின் தலைமை அழிக்கப் பட்டமையும் தென்னிலங்கை மக்கள் மத்தியில் பொதுவான வரவேற்பைப் பெற்றுள்ளமை காணக்கூடியதாகும். அதற்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று, தமிழர்கள் நாட்டைப் பிரித்து தனித் தமிழ் ஈழத்தை அமைக்க முற்பட்டுள்ளனர் என்ற அச்சம் முன்பிருந்தே இருந்து வந்துள்ளமை. இரண்டாவது, புலிகள் இயக்கம் சிங்களக் குடிமக்கள் மீதும் அவர்களது பிரதேசங்களிலும் தொடுத்து வந்த ஆயுதத் தாக்குதல்கள். இவற்றின் காரணமாக மகிந்த சிந்தனை அரசாங்கம் முன்னெடுத்த யுத்தத்தையும் அவர்கள் கூறி நின்ற பயங்கரவாத ஒழிப்பு என்பதையும் சிங்கள மக்களில் பெரும் பான்மையோர் ஏற்றுக் கொள்ளவே செய்தனர். அதே வேளை தமிழ் மக்களுக்குரிய அரசியல் தீர்வு நியாயமானதாக வழங்கப்பட வேண்டும் என்பதைச் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள ஒரு பகுதியினர் விரும்புகின்றனர் என்பதும் நிராகரிக்கக் கூடியதொன்றல்ல. இருப்பினும் போரின் வெற்றி ஊடாகத் தமது ஆட்சி அதிகாரத்தை வலுப்படுத்தித் தொடர்ந்தும் பதவிகளில் இருந்து வருவதைக் குறிக்கோளாகக் கொண்டே ஜனாதிபதியும் அவரது தலைமையிலான அரசாங்கமும்

செயற்பட்டு வருகின்ற பிரதான போக்கே தென்னிலங்கையில் காணப்படுகிறது. போரின் வெற்றி கொடுத்துள்ள மகிழ்ச்சி மயக்கத்திலிருந்து மக்கள் விடுபடுவதற்கு குறிப்பிட்ட காலம் தேவைப் படுவதாகவே உள்ளது. இப் போரின் மூலமாகக் கட்டியெழுப்பப் பட்டுள்ள அரசு யந்திரத்தின் கோரக் கரங்கள் சிங்கள மக்கள் மீது தமது வலிமையைக் காட்டி அடக்கு முறைகள் நிகழ்த்தப்படும் போதே அவற்றின் தாக்கத்தையும் வெற்றிக் கொண்டாட்டங்களின் எதிர் விளைவுகளையும் மக்கள் நடைமுறை அனுபவங்களாகக் காண்பர்.

**இனியொரு: தென்னிலங்கைச் சூழல் அவ்வாறெனில் வடக்கு கிழக்கின் தமிழ் மக்களின் மனநிலை எவ்வாறு இருந்து வருகின்றது என்பதைக் கூற முடியுமா?**

பதில் : பொதுவாகவே தமிழ மக்கள் மத்தியில் போரா ட்டத்தின் தோல்வியானது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளது. இதனை குறிப்பிட்ட பிரிவினர் புலிகள் இயக்கத்தின் மீதான அனுதாபமாகவும் கடுமையான விமர்சனமாகவும் மக்கள் பார்க்கின்றனர். அதே வேளை தங்களை இவ்வாறு ஒரு மோசமான அடக்குமுறைக்குள் தள்ளி விட்டார்களே என்ற வெறுப்பும் ஆத்திரமும் இருக்கவே செய்கிறது. வவுனியா மெனிக் தடை முகாமிலிருந்து அறுபது வயதிற்கு மேற்பட்டவர் என்பதற்காக வெளியே வந்த ஒரு முதியவரைச் சந்தித்த போது மேற்கூறிய போக்கின் அம்சங்களை அவர் கொண்டி ருந்ததை அவதானிக்க முடிந்தது. அவர் ஒரு முது மொழியை யும் கூறிவைத்தார். "பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டு கட்டியிருந்த கோவணத்தையும் இழந்து விட்டோம்." முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் உள்ள சுமார் மூன்று லட்சம் மக்களுக்கு மட்டுமன்றி வடக்கு கிழக்கின் தமிழ்த் தேசிய இனம் முழுவதற்கும் பொருந்தக் கூடிய ஒரு எதிர்மறைக் கூற்றாகவே இதனைக் கொள்ளமுடியும்.

**இனியொரு: அப்படியாயின் இந்நிலைக்கு யார் யார் காரண கர்த்தாக்கள் என நீங்கள் உங்களது மாக்சிச லெனினிச நிலைப்பாட்டின் ஊடாகக் காண்கிறீர்கள்?**

பதில்: இதைத் தனிநபர்கள் சம்மந்தப்பட்ட பிரச்சினைகளாக மட்டும் பார்க்கக் கூடாது. இது நமது நாட்டின் சமூக அமைப்பினதும் ஆளும் வர்க்கம் ஆளப்படும் வர்க்கங்கள் சம்மந்தப்பட்ட பிரச்சினையாகும். ஆனால் இதில் தனி நபர்களாகவும் ஆளும் தரப்புத் தலைமையாளர்களாகவும் இருந்து வந்தவர்களின் பங்கினையும் பாத்திரத்தையும் நிராகரித்து விடமுடியாது. கடந்த நூற்றாண்டின் ஆரம்பம் முதலே இன்றைய பேரினவாத நச்சு விருட்சத்திற்கான விதைகள் நாட்டப்பட்டு தகுந்த வழிகளில் தண்ணீர் ஊற்றிப் பராமரித்து வளர்க்கப் பட்டது. அதற்குரிய சூழலையும் நல்ல பசளையும் வழங்கியவர்கள் கொலனித்துவ ஏகாதிபத்திய வாதிகள். அதனை வளர்த்து ஆளும் வர்க்கப் பலாபலன்களைப் பெற்று வந்தவர்கள் நிலவுடைமை வழிவந்த சிங்கள பௌத்த மேட்டுக்குடி உயர் வர்க்கத்தினர். மறு தரப்பில் தமிழ் மேட்டுக் குடியினர் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறி உயர் வர்க்க அரசியலையே நடாத்தி வந்தனர். மேற் கூறிய இரு தரப்பினரும் சிங்கள தமிழ் உழைக்கும் மக்களின் அபிலாக்ஷைகளைக் கவனத்தில் கொள்ளாது விட்டது மட்டு மன்றி அவற்றிலிருந்து தேசியவாதக் கூக்குரல்களின் மூலம் மக்களைத் திசைதிருப்பியும் கொண்டனர். அவற்றின் எதிர் விளைவுகளையே தமிழ் மக்கள் நேரடியாகவும் சிங்கள மக்கள் மறைமுகமாகவும் அனுபவித்து வருகின்றனர் என்பதே யாதார்த்தமாக உள்ளது.

**இனியொரு: இன முரண்பாட்டையும் அதன் காரணமான பேரினவாத ஒடுக்குமுறையையும் அடையாளம் காணும் நீங்கள் அதற்கு எதிரான தமிழ்த் தேசியவாத நிலைப்பாட்டைத் தொடர்ச்சியாக எதிர்த்து வந்திருக்கிறீர்கள். இது ஏன் என்பதை விளக்கிக் கூறமுடியுமா?**

பதில் : நாங்கள் பௌத்த சிங்களப் பேரினவாதத்தை அடையாளம் காண்பதும் எதிர்ப்பதும் வர்க்கக் கண்ணோட் டத்தின் அடிப்படையிலேயே யாகும். எந்தவொரு தேசியவாதத் திற்கும் அது பெருந் தேசியவாதமாகிலும் குறுந் தேசியவாதமா கிலும் அதற்குரிய வர்க்க அடிப்படைகள் இருந்து வருகின்றன. அவற்றை மறைத்துக் கொண்டு தேசியவாதம் பேசுவது தவறான நிலைப்பாடு மட்டுமன்றி அபாயகரமானதுமாகும். இதுவே இலங்கையின் துயரமாக கடந்த நூற்றாண்டிலும் இன்றும்

தொடர்ந்து வருகின்ற யதார்த்தமாக உள்ளது. எனவே தேசியவாதத்தை யார் எத்தகைய நோக்கங்களுக்காகக் கொண்டிருக்கின்றார் என்று பார்ப்பது அவசியம் என்பதே நமது நிலைப்பாடாகும்.

**இனியொரு: அவ்வாறாயின் தமிழ்த் தேசியவாதம் கடந்த காலத்திலும் சமகாலத்திலும் பேரினவாத ஒடுக்கு முறையை எதிர்த்து நிற்கவோ போராடவோ இல்லை என்று கூற முற்படுகிறீர்களா?**

பதில்: எதிர்த்து நிறகவில்லை என்றோ போராடவில்லை என்றோ கூறமுற்படுவது முழுப் பூசனிக்காயை இலைச் சோற்றில் மறைக்க முற்படும் முட்டாள் தனமாகும். நாம் கூறுவதும் ஏற்கனவே சுட்டிக் காட்டி வந்ததும் என்னவெனில், தமிழ்த் தேசியவாதம் என்றுமே முற்போக்கான திசையில் பயணித்து அதற்குரிய பாதையில் உரிய கொள்கைகளை வகுத்து முன்செல்லவில்லை என்பதையேயாகும். நமது கண ணோட்டத்தில், தேசியவாதம் என்பது முதலாளித்துவ அடிப் படைகளைக் கொண்டதும் மக்களைத்தவறான வழிகளில் இட்டுச் செல்லக் கூடியதுமாகும். நான் ஏற்கனவே சுட்டிக் காட்டியது போன்று, இலங்கையில் இன்று சிங்கள, தமிழ், முஸ்லிம் தேசியவாதங்கள் யாவும் மேற்கூறிய அடிப்படைக ளிலேயே முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றால் உழைக்கும் மக்கள் பிளவுபடுத் தப்படுவது மட்டுமன்றி இன, மொழி, மத, பிரதேச நிலைகளின் ஊடாக ஒருவரோடு ஒருவரை மோத வைக்கவும் முடிகிறது. இந்தப் போக்கின் ஊடாகவே தமிழ்த் தேசியவாதப் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. இது தவறானதும் பிற்போக்கானதுமாகும்.

**இனியொரு: அப்படியாகில் தேசியவாதத்தில் முற்போக்கான கூறுகளோ அவற்றை முன்னெடுக்கும் நிலைப்பாடுகளோ இல்லை என வாதிடுகிறீர்களா?**

பதில்: இல்லை. அப்படி வாதிடுவது அறிவிலித்தனமாகும். தேசிய வாதத்திற்குச் சில அடிப்படைகள் இருப்பது போன்று குறிப்பிட்ட தூர எல்லைகளும் உண்டு. எனவே பிற்போக்கான

கூறுகளைக் கொண்ட தேசியவாதத்தால் அவ் எல்லைகளைச் சென்றடையவோ அன்றி அதனைத் தாண்டிப் பயணிக்கவோ முடியாது. ஆனால் முற்போக்கான கூறுகளைக் கொண்டுள்ள தேசியவாதத்தால் முன்னோக்கிச் சென்று அதன் எல்லைகளைத் தாண்டியும் சோசலிசப் பரப்புக்குள்ளும் பிரவேசிக்க முடியும். அத்தகைய தேசியவாதம், எதிரி யார், நண்பன் யார் என்பதைக் கண்டு பொது எதிரியை எதிர்ப்பதில் ஏனைய சக்திகளுடன் உறவை ஏற்படுத்தவே செய்யும்.

**இனியொரு: நீங்கள் கூறும் முற்போக்கான கூறுகளுடனும் எல்லைகளைத் தாண்டும் பாதையிலும் தமிழ்த் தேசியவாதம் பயணிக்கவில்லை என்று கூறினால் அது பழைய பாராளுமன்றத் தலைமைகளுக்குப் பொருந்தலாம். ஆனால் தமிழ்ப் போராளி இளைஞர் இயக்கங்கள் நீங்கள் கூறும் முற்போக்கான தமிழ்த் தேசியவாதத்தை முன்னெடுத்தவர்கள் என்று கூறுவதையிட்டு என்ன கூறுகிறீர்கள்?**

பதில் : தமிழ்த் தேசியவாதத்தை முன்னெடுத்ததாக நீங்கள் கூறும் தமிழ்ப் போராளி இயக்கங்கள் சில ஆரம்பத்தில் முற் போக்கான கூறுகளை அடையாளம் காட்டுவனவாகத் தோற்றம் தந்தனவே தவிர அவர்களது கொள்கை கோட்பாடுகளில் தெளிவின்மையும் ஊசலாட்டங்களும் இருக்கவே செய்தன. தமிழ் மக்களிடையே காணப்பட்ட உள் முரண்பாடுகளிலும் சிங்கள மக்களைப் பார்த்த பார்வைகளிலும் இந்தியாவை அணுகிய முறையிலும் அவர்களின் நிலைப்பாடு தெளிவற்ற தாகி விரைவாகவே பிற்போக்கான நிலைகளைச் சென்றடை ந்தது. இந்தியாவையோ அன்றி மேற்குலகத்தையோ தாங்கள பயன்படுத்துவதாகக் கூறி இறுதியில் அவர்களே அந்நியச் சக்திகளாற் பயன்படுத்தப்பட்ட பகடைக்காய்களாகினர். அத னால் அவர்கள் பெயரளவில் ஆரம்ப நிலையில் முன்வைத்த முற்போக்கானவை என்று கூறப்படும் சகலவற்றையும் தமிழ்த் தேசியவாதத்தில் இருந்துவந்த பிற்போக்கான கூறுகளுடன் சமரசமாக்கி அதற்குள் மூழ்கிப் போகினர். இறுதியில் ஒருவ ரோடு ஒருவர் மோதியதுடன் வழமையான தமிழ்த் தேசிய

பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தின் புதிய முகவர்களாகவும் மாற்றமடைந்தனர். இவர்கள் பேரினவாத ஆளும்வர்க்கச் சக்திகளுடன் சமரசமாகிக் கொள்ளவும் செய்தனர்.

**இனியொரு: நீங்கள் முற்கூறியது போன்று பல தமிழ் இளைஞர் இயக்கங்கள் சீரழிந்து கொண்டமை போல் அல்லாது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ்த் தேசியத்தை வித்தியாசமாக முன்னெடுத்து வந்தது என்று கூறப்படுவது பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

பதில் : புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை, தமிழ்த் தேசியவாதத்தின் பிற்போக்கான கூறுகளில் பெரும்பாலானவற்றைத் தங்களுடன் கொண்டிருந்தனர். அவர்கள் தமிழீழக் கோரிக்கையைப் பழைமை வாதப் பிற்போக்குவாத தமிழ்த் தேசியப் பாராளுமன்றத் தலைமையிடம் இருந்தே கையேற்றிருந்தனர். அதே போன்று சகல பழைமைவாதக் கருத்தியல் நடைமுறைகளையும் உள்ளூரக் கொண்டிருந்தனர். சில விடயங்களில், குறிப்பாகச் சாதிய முரண்பாட்டில், தாம் முற்போக்கானவர்கள் போன்று காட்ட முற்பட்டனரே தவிர, தமிழ் மக்கள் மத்தியில் அந்த முரண்பாட்டை உரியவாறு அணுகவோ தீர்க்கவோ முற்பட வில்லை. அப்படிச் செய்வது தமக்குப் பலவீனமாகி விடும் என்றே நம்பினர். மேலும், அவர்கள் இறுதி வரை நம்பியது அமெரிக்க மேற்குலகச் சக்திகளையேயாகும். உலகில் எங்காவது தேசிய விடுதலையை நேர்மையாக விரும்பிய மக்களும் விடுதலை இயக்கங்களும் ஏகாதிபத்தியங்களை நம்பிக்கையான நண்பர் களாகக் கொண்டுள்ளனரா என்பதைக் காணத் தவறினர். புலிகள் இயக்கத்தில் இணைந்திருந்த கீழ் மட்டத்தைச் சேர்ந்த சிலரிடம் தனிப்பட்ட முற்போக்கான சிந்தனைகளோ நடைமுறைகளோ ஏகாதிபத்திய எதிர்ப்போ இருந்திருக்கக் கூடும். ஆனால் தலைமையின் நோக்கிலும் போக்கிலும் தமிழ்த் தேசிய வாதத்தின் பிற்போக்கான அம்சங்களே மேலோங்கி இருந்தன. தமிழ்த் தேசிய வாதத்தின் ஆண்ட பரம்பரை அகங்காரம் புலிகள் இயக்கத்திடம் வாரிசுரிமையாகப் பெறப்பட்டிருந்தது. இதனைத் தமிழ்த் தேசியவாதத்தின் பிற்போக்கு அம்சங்களை அகங்காரமாக

முன்னெடுத்த அமிர்தலிங்கத்திடமும் அவரின் தொடர்ச்சியாகப் பின்பற்றிய பிரபாகரனிடமும் காணக் கூடியதாக இருந்தது. அமிர்தலிங்கம் ஆயுதம் தரிக்காத பிரபாகரன். பிரபாகரனோ ஆயுதம் தரித்த அமிர்தலிங்கம் என்பதாகக் காண்பது பொருத்தமான தாகும். இதன் ஊடாகப் புலிகள் இயக்கத்தின் பிற்போக்கான தமிழ்த் தேசியவாதத்தினை அடையாளம் காணலாம். ஆதலால், முப்பது வருடகாலத் தமிழர் போராட்ட வரலாற்றின் ஊடாகக் காணமுடிவது பாராளுமன்றப் பாதையில் இருந்து ஆயுதப் போராட்டத் தடத்திற்கு மாறிய பின்பும் பிற்போக்கான தமிழ்த் தேசியமே முனைப்பாக இருந்து வந்துள்ளது என்பதையேயாகும்.

**இனியொரு: அப்படியானால் தமிழீழ விடுதலைப்புலிகளின் இறுதி நேர நம்பிக்கையான அமெரிக்காவின் தயவை எதிர்பார்த்திருந்த நிகழ்வை நீங்கள் ஏலவே கூறிய கூற்றுக்கு ஆதாரமாகக் கொள்ள முடியுமா?**

பதில் : விடுதலைப் புலிகள் இயக்கம், அமெரிக்காவையும் மேற்குலகையும் அரவணைத்து நிற்கின்றது என்ற கண்ணோட்டம் முன்பிருந்தே பரவலாக இருந்து வந்த ஒன்று தான். அதற்கு அந் நாடுகளில் வசித்து வரும் தமிழர் மேட்டுக்குடி வழிவந்த உயர் வர்க்கத்தினர் ஒரு காரணமாவர். அதறகப்பால், யூதர்கள் மத்தியில் உருவாக்கப்பட்ட இஸ்ரேல் என்ற எண்ணக்கரு போன்ற ஒன்றைத் தமிழீழமாக உருவகபபடுத்தி அதனை அமெரிக்க மேற்குலக ஆதரவோடு வென்றெடுக்கலாம் என்ற நம்பிக்கை புலிகளின் கொள்கை வகுப்பாளர்க ளிடமும் தலைமையிடமும் உறுதியாக இருந்து வந்தது. அதற்கான ஒரு வலுவான ஆதாரமாகவே போர்க்களத்தின் இறுதி நாட்கஸில் அவர்கள் அமெரிக்காவின் ஒபாமா நிர்வாகத்திற்கு விடுத்த பணிவான வேண்டுகோள் அமைந்திருந்தது. இதற்கு மேல் அவர்களது அமெரிக்க விசுவாச நிலை பற்றிக் கூற அதிகம் தேவை இல்லை.

**இனியொரு: தமிழ் ஈழக் கோரிக்கை சாத்தியமற்றது. அது அந்நிய ஏகாதிபத்திய ஊடுருவலுக்கு வழி வ'குக்கும் என்ற கருத்தை**

**ஏற்கனவே நீங்களும் உங்கள் கட்சியும் முன்வைத்து வந்த நிலைப்பாடு பற்றி விளக்கிக் கூறுவீர்களா?**

பதில : மாக்சிச லெனினிசவாதிகளாகிய நாம் இது பற்றி அண்மைக் காலத்தில் மட்டும் எதிர்க் கருத்து முன்வைத்த வர்கள் அல்லர். எழுபதுகளின் ஆரம்பத்தில் இந்தியா முன்னின்று பங்காள தேசத்தை பாகிஸ்தானிடமிருந்து பிரித்தெடுத்துத் தனிநாடாக்கியமை போன்று இலங்கையிலும் தமிழீழத்தை உருவாக்கலாம் என்ற கருத்துநிலை உருவாக்கப்பட்டது. அதனை இந்தியாவின் மூலமாகவோ அல்லது மேற்குலக ஏகாதிபத்திய நாடுகள் ஊடாகவோ வென்றெடுக்கலாம் என்ற பெரு நம்பிக்கை ஊட்டப்பட்டது. அவ் வேளை இதனுள் உள்ளடங்கியுள்ள அந்நிய ஊடுருவல் பற்றிய அபாயத்தை முன்னெச்சரிக்கையாகச் சுட்டிக் காட்டித் தமிழீழம் சாத்தியம் அற்ற ஒன்று என்றும் எடுத்துக் கூறினோம் ஆனால் தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் தமது பாராளுமன்ற ஆசனங்களை அதிகரிக்கும் நோக்கில் இன, மொழி உணர்ச்சிகளை முறுக் கேற்றி, இளந் தலைமுறையினருக்கு தமிழீழக் கனவை ஊட்டினர். அவர்களும் யூதர்களையும் இஸ்ரேலையும் முன்னுதா ரணமாகக் கொண்டே தமிழீழ மாயையைக் கட்டியெழுப்பினர்.

**இனியொரு: தமிழீழக் கோரிக்கை பற்றி அன்று நீங்கள் எதிர்க்கருத்தைக் கொண்டிருந்த போதிலும் அதனை மக்கள் மத்திக்கு எந்தளவிற்கு பரப்புரை ரீதியாகக் கொண்டு சென்றீர்கள்?**

பதில் : எழுபதுகளின் ஆரம்பத்திலிருந்து தமிழீழம் என்ற கருத்து நிலை தமிழ் மக்கள் மத்தியில் முன்வைக்கப்பட்ட சூழலில் மாக்சிச லெனினிசவாதிகளாகிய நாம் அதன் அரசியல் பிற்போக்குத் தனத்தையும் சாத்தியமற்ற தன்மைகளையும் மக்கள் முன் பரந்தளவில் பரப்புரை செய்தோம். அன்று தோழர் நா. சண்முகதாசன் தலைமையிலான எமது மாக்சிச லெனினசக் கட்சி, தமிழ் மக்களிடையே கணிசமான செல்வாக்குடைய கட்சியாகக் காணப்பட்டது. வெகுஜனப் போராட்டங்களும் தொழிற்சங்கப் போராட்டங்களும் அதற்குக் காரணம். அறுபதுக ளின் நடுக் கூற்றில் இருந்து எழுபதுகளின் ஆரம்ப ஆண்டுகள் வரையிலான சூழல், கட்சியின் தலைமையில்

சாதியத்திற்கும் தீண்டாமைக்கும் எதிரான வெகுஜனப் போராட்டங்கள் வெற்றி பெற்றிருந்த சூழலாகும். அக் காலகட்ட த்தில், தமிழீழம் சாத்திய மற்றது என்பதை வலியுறுத்தி, எமது கட்சி பல கூட்டங்களையும் கருத்தரங்குகளையும் விவா தங்களையும் முன்னெடுத்து வந்தது. அதில் இரண்டு விவாத ங்கள் வரலாற்று முக்கியத்துவம் கொண்டவை. முதலாவது விவாதம் ஆனைக்கோட்டையில் பாரதி சனசமூக நிலையத்தினர் ஒழுங்கு செய்த விவாத மேடையில் இடம்பெற்றது. தமிழீழம் சாத்தியம் / சாத்தியமி ல்லை என்பதே தொனிப்பொருளாகும். சாத்தியம் எனக் கூறி ம.க. ஈழவேந்தன் தலைமையிலான தமிழரசுக்கட்சி சார்பான குழுவும் சாத்தியம் இல்லை என்பதை முன் வைத்து சி.கா. செந்திவேல் தலைமையிலான மாக்சிச லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி சார்பான குழுவும் கடுமையான விவாதத்தில் ஈடுபட்டன. அதற்குத் தலைமை தாங்கிய அவ்வூர்த் தமிழ்ப் பண்டிதர் ஒருவர் மேறபடி விவாதத்தில் முன்வை க்கப்பட்ட தர்க்க நியாயங்களின் படி தமிழீழம் சாத்தியமற்றது என வாதிட்ட குழுவினர் வெற்றி பெற்றுள்ளனர் என அறிவித் தார். இதனாற் பார்வையாளர்கள் மத்தியில் சலசலப்பு ஏற் படவும் செய்தது. அடுத்த விவாதம், சுன்னாகம் சந்தை மைதா னத்தில் தோழர் நா. சண்முகதாசனுக்கும் அன்றைய உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் வி. தருமலிங்கத்திற்கும் இடையில் இடம் பெற்றது. இதற்கு பிரபல கல்வியாளரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபருமான ஒரேற்றர் சி. சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். அவ் விவாதத்தில் தோழர் சண் தமிழீழம் என்பது தமிழ் மக்களுக்கு கண்ணாடியில் நிலாவைக் காட்டி ஏமாற்றுவது போன்றதாகும் எனச் சுட்டிக் காட்டி அதன் சாத்தியமற்ற அம்சங்களைச் கோடிட்டுக் காட்டி யிருந்தார். இவ்விரண்டு விவாதங்களும் 1975ஆம் ஆண்டில் இடம்பெற்றன. அதாவது தமிழீழப் பிரகடனம் செய்யப்படுவதற்கு முன்பாகவே அதன் சாத்தியமின்மையையும் அந்நிய சக்திகளின் தலையீடுகள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

**இனியொரு: இவ்வாறு நீங்களும் உங்கள் கட்சியும் தமிழீழக் கோரிக்கையை நிராகரித்த சூழலில் தமிழர் பிரச்சினைக்கு எத்தகைய தீர்வை முன்வைத்தீர்கள்?**

பதில் : எமது கட்சி தமிழ் மக்களின் இன, மொழி, பிரதேசம், பண்பாட்டுத் தனித்துவங்களை ஏற்றுக்கொண்டு பிரதேச சுயாட்சி அமைப்பின் மூலம் இனப் பிரச்சினையை வளரவிடாமல் தடுத்து நிறுத்தித் தீர்வு காணலாம் என்பதையே வற்புறுத்தி வந்தது. பிரதேச சுயாட்சிக் கொள்கையை கம்யூனிஸ்ட் கட்சி முன்பிருந்தே பின்பற்றி வந்தது. தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கொள்கையை முன்வைத்த காலத்தில், 1954ல் கம்யூனிஸ்ட் கட்சியின் வல்வெட்டித்துறை மாநாடு பிரதேச சுயாட்சிக் கொள்கைத் திட்டத்தை நிறைவேற்றியது. இதுவே முழுக் கட்சியின் கொள்கையாகவும் பின்பற்றப்பட்டது. அக் கருத்துப் பரவுவதைத் தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் தமது தீவிர உணர்ச்சிப் பிரசாரத்தால் முறியடித்தன. பிரதேச சுயாட்சியை ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் இனவாதத்தை வளர்க்காது முன்னெடுக்க வேண்டும் என்பதையே பொதுவாகவே இடது சாரிகள் அனை வரும் வலியுறுத்தி வந்தனர். ஆனால் பாரா ளுமன்ற அதிகார த்திற்குப் போட்டியிட்டு வந்த இரண்டு சிங்கள பௌத்த பேரின வாத முதலாளித்துவக் கட்சிகள் அத்தகைய தீர்வு ஏற்படு வதை நாசப்படுத்தியே வநதுள்ளமை தான் வரலாறாகும்.

**இனியொரு: இலங்கையின் இடதுசாரிகள் தேசிய இனப்பிரச்சினை யில் நேர்மையாக நடக்கவில்லை என்ற குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படுகிறதே அது பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

பதில் : பொத்தாம் பொதுவாக இடதுசாரிகள் என்று கூறப்படு வது வலதுசாரித் தமிழ்த்தேசியவாத சக்திகளது குற்றச் சாட்டாகும். இந்த நாட்டில் இடதுசாரி இயக்கம் பொதுவாகவே அறுபதுகளின் நடுக் கூறுவரை இனப்பிரச்சினையில் நேர்மை யாகவே நடந்து வந்துள்ளன. மலையக மக்களது குடியுரிமை பறிக்கப்பட்ட வேளையிலும் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற் றப்பட்ட போதும் இன்னும் பிற தமிழ் முஸ்லீம் மலையக மக்களுக்கு எதிரான அரசாங்க நடவடிக்கைகளின் போதும் இம் மக்களின் பக்கமே இடதுசாரிகள் உரத்துக் குரல் கொடு த்து வந்தனர். அவ்வேளைகளில் எல்லாம் இடதுசாரிக ளுடன் இணைந்து நிற்கவோ ஆதரவு தரவோ தமிழர் தலை மைகள் முன்வரவில்லை. அதன் பின், இடதுசாரிகள் பாராளுமன்ற

சந்தர்ப் பவாத வழியில் செயற்படத் தொடங்கிய காலம் முதல் தேசிய இனப்பிரச்சினையில் சறுக்கல்களையும் ஊசலா ட்டங்களையும் கடைப்பிடித்துப் பேரினவாத சக்திகளின் முன் குரலற்றவர்கள் ஆனார்கள். ஆனால் அவர்களது நிலைப் பாட்டிற்கு மாறாக, நேர்மையான இடதுசாரிகள், பாராளுமன்ற த்திற்கு அப்பால், தேசிய இனப்பிரச்சினையில் உறுதியாகவும் நேர்மையாகவும் வழிநடந்து வந்துள்ளனர் என்பது திட்டமிட்டே மறைக்கப்படுகிறது. இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் இடதுசாரி களின் நிலைப்பாட்டினை கனடாவின் மனிற்ரோபா பல்கலைக் கழகப் பேராசிரியரானரவி வைத்தீஸ்பரா ஆய்வு செய்த நூல் ஒன்று பல்வேறு விடயங்களை தெளிவுபடுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**இனியொரு: அப்படியாயின் தேசிய இனப்பிரச்சினையில் முன்வைத்த கொள்கை நிலைப்பாடும் நடைமுறை வேலைகள் பற்றியும் சுருக்கமாகக் கூறமுடியுமா?**

பதில் : எங்களுடைய கட்சியான புதிய ஜனநாயக கட்சி 1978ஆம் ஆண்டிலேயே தோற்றம் பெற்றது. அது தோற்றம் பெற்ற சூழலானது பௌத்த சிங்களப் பேரினவாதம் ஜே.ஆரின் தலைமையில் ராணுவ ஒடுக்குமுறையாக முன்தள்ளப்பட்ட காலப்பகுதியாகும். அதே போன்று, தமிழ்த் தேசியவாதத் தலைமையிடம் இருந்து ஆயுதப்போராட்ட இளைஞர் இயக்க ங்கள் தமிழீழக் கோரிக்கையை தமதாக்கி முன்னெடுத்து வந்த காலமுமாகும். இந் நிலையில் எமது கட்சி ஒடுக்கப்படும் அனைத்து உழைக்கும் மக்களினதும் கட்சி என்பதால் தேசிய இன ஒடுக்குமுறையையும் எதிர்த்தே நின்றது. அதே வேளை, பிரிவினையின் அடிப்படையிலான தமிழீழக் கோரிக்கையை சாத்தியமற்ற ஒன்று என்றும் பிற்போக்கானதென்றும் நிராக ரித்துக் கொண்டது. இதன காரணமாகத், தேசிய இனப்பிரச்சி னையில் சுய நிர்ணய உரிமை பற்றிய வரையறைகளை வளர்த்தெடுப்பதில் தத்துவார்த்த ரீதியாகவும் நடைமுறை யதார்த்தத்தின் வாயிலாகவும் கட்சி தனது நிலைப்பாட்டை முன்வைத்து வலியுறுத்தி வந்தது. தமிழ் மக்கள் பாரம்பரிய

மாக வாழ்ந்து வந்த வடக்கு-கிழக்கு இணைந்த பிரதேசத்தில் சுயாட்சியை கட்சி வலியுறுத்தியது. அத்தகைய சுயாட்சி அமைப்பின் கீழ், முஸ்லிம் மக்களின் தனித்துவங்களை யும் தன்னடையாளங்களையும் பேணக் கூடிய சுயாட்சி உள்ள மைப்பை ஒரு அலகாகக் கொள்ளல் வேண்டும் என்பதை யும் முன்வைத்தது. அவ்வாறே, மலையக மக்களுக்கான சுயாட்சி உள் அமைப்புகளை சுயாட்சி அலகுகளாக மலைய கப் பிரதேசத்தில் உருவாக்குவதையும் கட்சி முன்வைத்தது. இத்தகைய சுயாட்சியானது சுயநிர்ணய உரிமை அடிப்படை யில் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ்த் தேசிய இனங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதை கட்சி தனது இரண்டாவது தேசிய மாநாட்டில் தெளிவாக வலியுறுத்தி நின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

**இனியொரு: இவ்விடத்தில் உங்கள் கட்சி முன்வைத்துள்ள தேசிய இன முரண்பாடு பிரதான முரண்பாடாக இருந்து வருகின்றது என்ற வரையறை எந்தளவுக்குச் சரியானது என்பதை விளக்க முடியுமா?**

பதில் : தேசிய இன முரண்பாடு பிரதான முரண்பாடாக வளர்ச்சி பெற்றுள்ளது என்ற எமது நான்காவது தேசிய மாநாட்டின் வரையறுப்பானது இலங்கையின் சமூக முரண்பாடு களினதும் அவை தோற்றுவித்த பாரிய பிரச்சினைகளிலிருந்தும் பெறப்பட்ட ஒன்றாகும். அதாவது இலங்கையின் அடிப்படை முரண்பாடான வர்க்க முரண்பாட்டின் வளர்ச்சியையும் முனைப் பையும் மழுங்கடிக்கும் வகையில் இனமுரண்பாடு யுத்தமாக் கப்பட்டும் அரசியல் தீர்வு இன்றியும் தொடரப்படுகிறது. சகல முனைகளிலும் தேசிய இனப்பிரச்சினை கூர்மையாக்கப் பட்டுள்ள சூழலிலேயே அது பிரதான முரண்பாடாகியது. வெறுமனே புலிகள் இயக்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடை யிலான போராட்டத்தால் மட்டும் அது பிரதான முரண்பாடாக வில்லை. அவ்வாறு பார்ப்பது, தேசிய இன முரண்பாட்டின் அடிப்படைகளை மறுத்துத் தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினையையும் இருப்பையும் எதிர்காலத்தையும் குறுக்கு வதாகும். இன்றும் கூட, அதாவது யுத்தம் முடிவுற்றுப் புலிகள்

இயக்கத் தலைமை அழிக்கப்பட்ட பின்பும் கூட இப் பிரதான முரண்பாடு என்பது நீடித்துவரவே செய்கின்றது. இது இன்றைய அரசியல் யதார்த்த மாகவே உள்ளது. தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயபூர்வமா னதும் ஏற்றுக்கொள்ளத் தக்கதுமான அரசியல் தீர்வு முன்வை க்கப் பட்டு அரசியல் அமைப்பு வாயிலாகவும் நடைமுறை வழிகளிலும் செயற்படுத்தப்படும் சூழலிலேயே தேசிய இன முரண்பாடு பிரதான முரண்பாடு என்ற இடத்தி லிருந்து கீழிற ங்கித் தாழ்நிலைக்கு வர முடியும். அப்போதே அடிப்படை முரண்பாடான வர்க்க முரண்பாடு முனைப்படைந்து மேற்கிள ம்பி அனைத்து உழைக்கும் மக்களும் தமது வர்க்க ஐக்கிய த்தின் மூலம் வெகுஜனப் போராட்டப் பாதையில் முன்சென்று கொள்ள முடியும்.

**இனியொரு : இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை பிரதான முரண்பாடாகவும் யுத்தமாகவும் ஆயுதப் போராட்டமாகவும் வளர்ச்சிபெற மூன்று சக்திகள் காரணமாக நின்றதைப் பற்றி நீங்கள் முன்னைய அறிக்கை ஒன்றில் சுட்டிக் காட்டியிருந்தீர்கள். அதுபற்றி சிறிது கூற முடியுமா?**

பதில் : இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை கடந்த முப்பது ஆண்டுகளாகக் கொடிய யுத்தமாகவும் அழிவுகரமான ஆயுதப் போராட்டமாகவும் நீடித்து வந்ததில் மூன்று தரப்பினர் முக்கிய பங்குதாரர்கள் ஆவர்.

1 - இலங்கையின் நிலவுடைமை வழிவந்த பௌத்த சிங்களப் பேரினவாத முதலாளித்துவ மேட்டுக்குடி உயர்வர்க்க ஆளும் வர்க்க சக்திகள்.

2 - தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் தொடர்ந்து முன்னெடுத்து வந்த குறுந்தேசியவாத நிலைப்பாடு.

3 - இந்திய பிராந்திய மேலாதிக்க சக்திகளும் அமெரிக்க-மேற்குலக ஏகாதிபத்திய சக்திகளும் பின்னால் இருந்து செயற்பட்டு வந்தமை.

அதன் மூலம் இம் மூன்று தரப்பினரும் தத்தமது வர்க்க ஆதிக்க நலன்களையும் தேவைகளையும் தத்தமக்குரிய இருப்பு,

எதிர்காலம் என்பனவற்றையும் பேணிப் பாதுகாத்துக் கொண்டனர். அதே நேரம், கடந்த முப்பது வருடகால யுத்தத்திலும் போரட்டத்திலும் ஏகப்பெரும்பான்மையான தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள் மற்றும் உழைக்கும் மக்களே இழப்புக்களையும் அழிவுகளையும் பெற்றுக் கொண்டனர் என்பதே உண்மையாகும்.

**இனியொரு: தமிழீழக் கோரிக்கையானது பல்லின மக்கள் வாழும் இலங்கைத் தீவில் முரண்பாடுகளை மேலும் வளர்த்துள்ளது. இந் நிலையில் தமிழ்-முஸ்லிம் உறவுகள் சீர்குலைந்துள்ளன. இவற்றுக்கான காரணங்களை எவ்வாறு இனம் காண்கிறீர்கள்?**

பதில் : இலங்கைத் தீவில் ஏற்கனவே இன முரண்பாட்டின் தீவிரத்தாலும் பேரினவாத ஒடுக்குமுறையாலும் அதை எதிர்ப்பதாகக் கூறி நின்ற தமிழ்த் தேசியத்தின் குறுகிய நிலைப்பாடுகளாலும் தமிழ்-சிங்கள உறவுகள் உடைந்து பகைநிலையாக்கப்பட்டன. அதன்பின், தமிழ்-முஸ்லிம் உறவு திட்டமிட்டே சீர்குலைக்கப்பட்டது. இதில் பிரித்தாளும் ஆளும் வர்க்கச் சூழ்ச்சி ஒருபுறம் என்றால் தமிழ்த் தேசியத்தின் குறுந்தேசிய நிலைப்பாடு, குறிப்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாட்டால் அந்த உறவு உடைக்கப்பட்டுப் பகை நிலைக்குத் தள்ளப்பட்டது என்பதே உண்மை நிலையாகும். மேலும், தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையகத் தேசியங்கள் ஒவ்வொன்றும் தம்முள் கொண்டுள்ள பிற்போக்கான கூறுகளை முன்தள்ளியவாறே தேசிய இனப் பிரச்சினையில் கொள்கை வகுத்து நிற்கின்றன. அத்தகைய கொள்கைகள் உயர் வர்க்க, வசதி படைத் தவர்களின் பதவிகளுக்கும் சொத்து சுகபோக வாழ்வுக்குமே வசதியளிப்பனவாக உள்ளனவே அன்றி, அனைத்து மக்களினதும் நல்வாழ்வுக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் அல்ல என்பதே உண்மையாகும்.

**இனியொரு: தமிழீழக் கோரிக்கையை முன்வைத்த போராட்டங்களின் ஊடாகத் தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் சாதிய வர்க்க அடிப்படையில் ஒடுக்கப்பட்டு வந்த தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை எவ்வாறு இருந்து வந்துள்ளது?**

பதில் : தமிழீழக் கோரிக்கையைப் பிரகடனப்படுத்தியவர்களின் பிள்ளைகளும் அதற்கு ஆதரவாக வேகமான இன உணர்வை முறுக்கிக் கொண்ட வசதி வாய்ப்புகள் பெற்றவர்களும் "ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள வேண்டும்" என முழக்க மிட்டவர்களும் வேளைக்கே புலம்பெயர்ந்து கொண்டனர். அவர்களுக்கென்ன போய்விட்டார்கள் அகப்பட்டவர்கள் நாங்க ளல்லோ என்ற நிலைக்கே தாழ்த்தப்பட்ட மக்கள் ஆளானார் கள். அவர்களே தமிழீழப் போராட்டத்தின் இடிதாங்கிகள் ஆகுமாறு நிர்பந்திக்கப்பட்டனர். அழிவுகளையும் இழப்புக்களை யும் அதிகளவிற்கு அம் மக்களே பெற வேண்டியதாயிற்று. இதனைத் தமிழ்த் தேசியவாதத்தின் போலி முழக்கங்களுக்கு அப்பால் தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று சாதிய வர்க்க நிலை களின் ஊடே காண்கின்றனர்.

**இனியொரு: நீங்கள் புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிக் கூறினீர்கள். அப்படியானால் எல்லோரையும் ஒரே தரத்தில் வைத்து நோக்குகின்றீர்களா? அப்படி இல்லையெனில் புலம் பெயர்ந்ததன் மூலம் ஏற்பட்ட சாதக பாதக நிலை பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

பதில் : நான் ஏற்கனவே கூறிய பிரிவினர் தமிழர்கள் மத்தி யிலிருந்து சென்ற வசதி வாய்ப்புக்கள் கொண்ட மேட்டுக்கு டித் தமிழர்கள் பற்றியே அன்றி, நாட்டின் இன ஒடுக்குமுறை யினாலும் குடும்பச் சூழலாலும் பல்வேறு துன்ப துயரங்களுடன் புலம் பெயர்ந்த தமிழர்களை அல்ல என்பது புரியப்பட வேண் டும். கடந்த முப்பது வருட கால யுத்தச் சூழலிற் புலம் பெய ர்ந்த தமிழர்கள் தம் உறவுகளுக்கும் பொது நன்மைகளுக் கும் தாராளமாக உதவி வந்தனர். அதன் மூலம் பட்டினிச் சாவு ஏற்படும் சூழல்கள் தவிர்க்கப்பட்டமை சாதகமான அம்ச மேயாகும். அதே வேளை, போராட்டத்தின் பெயரால் புலம் பெயர்ந்த மக்களிடமிருந்து நிர்ப்பந்தப்படுத்திப் பெறப்பட்ட பெருந் தொகையான பணம் தேவையற்ற வழிகளில் சமூகப் பயன்பாடற்ற விதத்தில் அழிவுகரமான செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டமை பாதகமான அம்சமாகும். புலப்பெயர்வு தனிப்பட்ட குடும்பங்களின் உயர்ச்சிக்கு உதவிய அதே வேளை,

தமிழ்த் தேசிய இனத்தின் இருப்புக்கும் எதிர்காலத்திற் குமான வேர்களை அறுபட வைத்துள்ளமை பாதகமானதாகும்.

**இனியொரு: இலங்கையில் பேரினவாத ஒடுக்கு முறைக்கு முகம்கொடுத்து வரும் முஸ்லிம் மலையக மக்களின் விடுதலைக்குத் தீர்வாக நீங்கள் எதனை முன் வைக்கின்றீர்கள்?**

பதில் : இலங்கையின் பேரினவாத ஒடுக்குமுறை காரணமான தேசிய இனப் பிரச்சினை என்பதைத், தனியே தமிழ்த் தேசிய இனத்திற்குரிய பிரச்சினையாக மட்டும் நாம் பார்க்கவில்லை. முஸ்லிம் தேசிய இனத்தையும் மலையகத் தமிழ்த் தேசிய இனத்தையும் உள்ளடக்கியுள்ள பிரச்சினையாகவே இருந்து வருகின்றது. எனவே தேசிய இனப்பிரச்சினையின் தீர்வு என்பது அவற்றையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பது தீர்வின் முன் நிபந்தனையாகும் என்பதே எமது நிலைப்பா டாகும். அத் தீர்வு நிச்சயம் சுயநிர்ணய உரிமைக்குடபட்ட சுயாட்சித் தீர்வாகவே இருக்க வேண்டும்.

**இனியொரு : சிங்கள மக்களில் பெரும்பான்மையினர் பேரினவாத மாயைக்குள் சிக்கியிருப்பதால் ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு சாத்தியமற்றது என்கிற கருத்து நிலைபற்றி உங்கள் கண்ணோட்டம் எத்தகையது?**

பதில் : சிங்கள மக்கள் அவ்வாறு பேரினவாத மாயைக்குள் சிக்குண்டு இருப்பதற்கு சிங்கள ஆளும் வர்க்கமே பிரதான காரணம். புவிசார் அரசியற் காரணங்களும் அவற்றை ஊதிப் பெருப்பித்து வரும் பேரினவாத சக்திகளின் பரப்புரைகளும் அடுத்த காரணமாகவுள்ளன. இந் நிலையில், அனைவரும், இன, மத, மொழி நிலைகள் சார்ந்த கொள்கை நடைமுறைக ளுக்கு அப்பாலாக, இலங்கை மக்கள், இலங்கையின் சுபீட்சமும் எதிர்காலம் என்னும் அடிப்படையிலான கொள்கை யினை முன்னெடுக்க வேண்டும். இது கடினமான காரியமா கிலும் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ்த் தேசிய இனங்கள் மற்றும் சிறுபான்மை சமூகங்கள் மத்தியில் புதிய அடித்தளம் பழைய பட்டறிவுகள் மூலம் கட்டியெழுப்பப்பட

வேண்டும். பல்லினத் தேசியமாகவும் அதனை ஏற்றுக் கொண்ட நிலைப் பாடாகவும் அது இருக்க வேண்டும். அதற்கான நம்பிக்கையும் முயற்சியும் அவசியம்.

**இனியொரு : நீங்கள் கடந்த முப்பது வருட யுத்தத்திற்கு பங்களித்த மூன்று சக்திகள் பற்றி ஏலவே கூறியிருந்தீர்கள். அதில் ஒன்றான இந்திய, அமெரிக்க, மேற்குலக சக்திகளின் பாத்திரம் பற்றிக் கூறுவீர்களா?**

பதில் : அன்று 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானமாக தமிழ் ஈழக் கோரிக்கை முன்வைக்கப் பட்ட போதே அதனை வென்றெடுக்கும் பிரதான நம்பிக்கையாக இந்தியாவே கொள் ளப்பட்டது. அத்துடன் அமெரிக்க மேற்குலக ஆதரவும் அரவ ணைப்பும் பெறமுடியும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. அதே வேளை, இந்தியாவும் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் இக் கோரிக்கையையும் அதற்கு பின்னால் இளைஞர் சக்தி ஆயுதம் தூக்கி நிற்பதையும் வெகுவாக, ஆனால் மறைமுக மாக, ஆதரித்தன. அதன் மூலம் தமது நீண்டகால உட்கிட க்கைகளை நடைமுறையாக்கி அறுவடையாக்கிக் கொண்டனர்.

1. தமிழர்கள் மத்தியில் அறுபதுகளில் உருவாகி வந்த இடது சாரிப் புரட்சிகரப் போராட்டச் சிந்தனையில் இருந்து தமிழ் இளைஞர்களைத் திசை திருப்புவது.

2. தூரநோக்கில் புரட்சிகர சக்திகளாக வளரக்கூடிய தமிழ் மக்களிடையேயான இளந் தலைமுறையினரை அழிவுகளுக்கு உள்ளாக்குவது.

3. இன மோதலை உக்கிரப்படுத்தி அதன் ஊடாகத் தத்தமது பொருளாதார அரசியல் பண்பாட்டு ஆதிக்கங்களை நிலை நிறுத்துதல்.

4. ஆயுத விற்பனையை அதிகரித்தலும் ராணுவமயப்படுத்தலும்.

முப்பது வருடகால யுத்தத்தை ஒருவர், சமூக நிலைசார்ந்தும் வரலாற்று நோக்கிலும் காண்பாரானால் மேற்கூறியவற்றை அடையாளம் காண்பதில் சிரமம் இருக்காது.

**இனியொரு: அப்படியாயின் சீனாவின் பங்களிப்பு அல்லது உள்நுழைதல் பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

பதில் : நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இலங்கையின் முப்பது வருட யுத்தத்தில் இந்திய-அமெரிக்க-மேற்குலக ஆதிக்கப் போட்டியே முக்கியமானதாகும். அதே வேளை, சீனா தடம்மாறிய சோஷலிசப் பொருளாதாரப் பிறழ்வுகளுக்கு ஏற்பத் தனது பங்கிற்கு இலங்கை அரசாங்கத்தின் ஊடாகத் தன்னை வலுப்படுத்தி ஏற்கனவே இலங்கையில் இருந்து வந்த இடத்தைத் தக்க வைப்பதிலும் முழு மூச்சாக ஈடுபட்டது என்பது ஏற்கக் கூடியதாகும். ஆயுத விற்பனை முதல் அபிவிருத்தித் திட்டங்கள் வரை, ஒரு தொடர்ச்சியைச் சீனா கொண்டிருந்தது. அவை இந்திய, அமெரிக்க, மேற்குலக நாடுகளின் நோக்கையும் போக்கையும் கொண்டிருந்த அளவுக்கு அல்ல என்பதே இது வரையான மதிப்பீடாகும். ஆனால் மேற்கூறிய சீனப் பூச்சாண்டியைப் பெரிதாகக் காட்டியே முன்னவை தத்தமது கால்களை மிக உறுதியாக இலங்கையில் பதித்து வருகின்றன என்பது காணக் கூடியதேயாகும். எம்மைப் பொறுத்தவரை, எத்தகைய அந்நிய ஆதிக்க சக்திகளும் எந்த வடிவில் இலங்கைக்குள் ஊடுருவினாலும் அதனை நிராகரிப்பதும் எதிர்ப்பதுமே எமது நிலைப்பாடாகும். அதற்குச் சனாவோ பாகிஸ்தானோ எவ்வகையிலும் விதிவிலக்காக இருக்க முடியாது.

**இனியொரு: இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நீங்களும் உங்கள் கட்சியும் முன்வைக்கும் மாக்சிச லெனினிச அடிப்படையிலான கொள்கையும் நடைமுறையும் பற்றிக் கூறுங்கள்.**

பதில் : இவ்விடயத்தை எமது கட்சி ஏற்கனவே தனது மாக்சிச லெனினிச நிலைப்பாட்டின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளது. அதன் மூலம் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்குரிய மார்க்கத்தையும வகுத்து முன்வைத்துள்ளது. கடந்த நூற்றாண்டிலிருந்து இன்று வரையான தமிழர் போராட்ட வரலாற்றை மூன்று கட்டங்களாக வகைப்படுத்தி நான்காவது கால கட்டத்திற்கான பாதையையும் சுட்டிக் காட்டியுள்ளது.

1. பொன் இராமநாதன் சகோதரர்களின் காலம் முதல் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் ஐம்பதுக்கு ஐம்பது எனும் சமநிலைக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வெற்றிபெற முடியாது போன காலம்வரை முதலாவது காலகட்டமாகும்.

2. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து அது வெற்றிய ளிக்காது தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்ட காலம் வரை இரண்டாவது கால கட்டமாகும்.

3. தமிழீழக் கோரிக்கையைத் தமிழ் இளைஞர் இயக்கங்கள் ஆயுதப் போராட்டம் மூலம் வென்றெடுக்க முற்பட்டு இறுதியில் வே. வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிற் போராடி அண் மையில் அழிவுற்றது வரையான முப்பது ஆண்டுகள் மூன்றா வது கால கட்டமாகும்.

4. எனவே, நான்காவது காலகட்டமாக அமைய வேண்டியதும் செல்ல வேண்டியதும் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவ ர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பெண்கள் உள்ளிட்ட உழைக்கும் மக்கள் தலைமையிலான கொள்கையும் வெகுஜனப் போராட்ட மார்க்கமுமேயாகும். இப் போராட்டத்தின் இலக்கு ஐக்கியப் பட்ட இலங்கைக்குள் வடக்கு கிழக்கு இணைந்த தமிழ், முஸ் லிம் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் சுயநிர்ணய உரிமை யின் அடிப்படையிலான சுயாட்சியை வென்றெடுக்க மக்களை ஐக்கியப்படுத்தி முன் செல்வதாகவே அமைய முடியும். தமது சொந்தத் தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் இந் நான்காம் கட்டப் போராட்ட மார்க்கத்தில், சுயாட்சி என்பதும் சுயநிர்ணய உரிமை என்பதும் பிரிவினை அல்ல, அவை சமத்துவத்தையும் ஐக்கியத்தையும் முழு இலங்கையின் சுதந்திரத்தையும் சுபீட் சத்தையும் அடி ஆதாரமாகக் கொண்டவை என்பதைச் சிங் கள மக்கள் மத்தியில் விளக்கிப் பதிய வைக்க வேண்டும். அதன் மூலம் தமிழ் முஸ்லிம் மலையகத் தமிழ்த் தேசிய இனங்களின் வாழ்வுரிமைகளையும் அபிலாஷை களையும் உள்ளடக்கி நிற்பதனையும் விளங்க வைக்க வேண் டும். இதிற் சிங்கள மக்கள் மத்தியிலான இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகள் முக்கிய பாத்திரம் வகிக்குமாறு அவர்க ளை இணைத்துச் செல்லப்பட வேண்டும். இதனையே எமது கட்சி தேசிய இனப் பிரச்சினைக்கு உரியதும் தமிழ் மக்கள் பயணிக்க வேண்டியதுமான அரசியல் பாதை என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டி நிற்கிறது.

**இனியொரு: புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் "நாடு கடந்த தமிழீழ அரசு" பற்றி முன்வைக்கப்படும் கொள்கை பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

பதில் : புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் "நாடு கடந்த தமிழீழ அரசு" உருவாக்குவது என்ற எண்ணக்கரு புலம்பெயர் ந்த தமிழர்கள் அனைவரினதும் விருப்பம் அன்று. அது அங்கு வாழும் மேட்டுக்குடி ஆண்ட பரம்பரையினராகத் தம்மைக் கருதும் உயர் வர்க்கத்தினரின் ஆழ்மன விருப்பேயாகும். இது யூத சியோனிச வழியில் இஸ்ரேலை உருவாக்கிய சிந் தனை மரபுக்கு உட்பட்டதாகும். அவ்வாறாயின அத்தகைய எண்ணக் கருவிற்கு ஏகாதிபத்திய அரவணைப்பும் உள்ளார்ந்த சதி ஆலோசனைகளும் இருக்கவே செய்யும். இத்தகைய போக்கு இலங்கைத் தமிழர்களை அபாயகரமான நிலைக்கு மீண்டும் தள்ளிக் கொள்வதாக அமைவதுடன் சுயாட்சிக்கான அவர்களது நியாயமான போராட்டத்தையும் அதன் மூலமாகக் கிடைக்கக் கூடிய நியாயமான அரசியல் தீர்வையும் இல்லாமற் செய்யக் கூடியதுமாகும். தமிழ் மக்கள் தமது விடுதலைக்கான எதிர்காலக் கொள்கையையும் போராட்ட மார்க்கத்தினையும் தமது சொந்த மண்ணில் கடந்த காலப் பட்டறிவின் ஊடாகத் தீர்மானிக்க வேண்டுமே தவிர அவை புலம் பெயர்ந்த மேட்டு க்குடித் தமிழ்க் கனவான்களும் கனவாட்டிகளும் தீர்மானித்து திணிக்கக் கூடியவையாக இருக்க முடியாது. சாத்தியமற்ற தமிழீழக் கோரிக்கைக்காகத் தமிழ் மக்கள் கடந்த முப்பது ஆண்டுகளில் சுமார் இரண்டரை லட்சம் வரையான உயிர்களை இழந்துள்ளனர். சுமார் ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்-யுவதிகள் விடுதலையின் பெயரால் சகல இயக்கங்க ளினதும் போராளிகளாகி மடிந்து கொண்டனர். பல ஆயிரம் பேர் சிறைகளில் உள்ளனர். ஐந்து லட்சம் பேர் வரை ஏற்க னவே இடம்பெயர்ந்து சொந்த இடங்களை இழந்துள்ளனர். தற்போது மூன்று லட்சம் மக்கள் முட்கம்பி முகாம்களில் அவல வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். முப்பது வருடத்தில் பல்லாயிரம் கோடி ரூபாய்கள் பெறுமதியுள்ள தமது

வாழ்வாதாரச் சொத்துக்களை இழந்துள்ளனர். சுமார் ஒரு இலட்சம் கணவன்மாரையும் பிள் ளைகளையும் இழந்த பெண்களின் அவலக் குரல்கள் இன்னும் வடக்கு-கிழக்கில் கேட்ட வண்ணமே உள்ளன. அங்கவீனர்களின் எண்ணிக்கை பல்லாயிரம் பேராக உள்ளது. இத்தனை அழிவுக ளின் அவலங்களும் தாக்கங்களும் இரத்தக் கறைகளும் மாறவி ல்லை. மாறுவதற்கான எவ்வித தீர்வோ திட்டமும் ஏற்படவி ல்லை. இந் நிலையில் அடுத்த அழிவுக்கு வழிகோலும் ஒன்றா கவே "நாடு கடந்த தமிழீழ அரசைப்" புலம் பெயர்ந்த சிலர் முன்வைக்கிறார்கள். இவர்கள் ஒரு முறை இந்த மண்ணிற்கு வந்து வவுனியாவிலோ வடக்கிலோ கிழக்கிலோ தமிழ மக்கள் மத்தியில் இதனை முன் வைப்பார்களானால் என்ன இடம்பெறும் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

**இனியொரு: நீங்களும் உங்கள் கட்சியும் முன்வைக்கும் கொள்கை களைத் தமிழ் மக்கள் எந்தளவிற்கு ஏற்றுச் செயற்படுத்த முன்வரு வார்கள் என்று நம்புகிறீர்கள்?**

பதில் : தமிழர்கள் மத்தியில் இறுகிப்போன பழைமைவாதச் சூழலில் நிலவுடைமை வழிவந்த முதலாளித்துவ உயர் வர்க்கச் சிந்தனையின் தாக்கம் அரசியலிலும் இருந்து வருவது உண்மையேயாகும். இருப்பினும் அவர்கள் மத்தியில் சுரண டப்படும் உழைக்கும் மக்களும் சாதிய ரீதியில் அடக்கப்படும் சமூக நீதி மறுக்கப்படும் மக்களும் இருக்கவே செய்கிறார்கள். அத்தகைய மக்கள் மத்தியில் ஏற்கனவே எமது கட்சிக்கு பர வலான ஆதரவுத் தளம் இருந்து வருகிறது. அதனை விஸ்தரித்து எமது கொள்கைகளை அனைத்து மக்கள் மத்தி க்கும் எடுத்துச் செல்வோம் என்பதில் உறுதியும் நம்பிக்கையும் இருக்கிறது. எனினும் இது கடுமையான எதிர் நீச்சலும் சவாலு மாகும். சமூக முரண்பாடுகளைச் சரியானபடி அடையாளங் கண்டு உரிய கொள்கைகள் மூலம் போராட்ட மார்க்கத்தை முன்வைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் ஒரு மாக்சிச லெனினிசக் கட்சி என்ற முறையில் எமக்குரியதாகும். அதனை ஏற்பதும் முன்னெடுத்துச் செல்ல முன் வருவதும் மக்களைப்

பெறுத்த விடயமாகும். இதில் தமிழ் இளைஞர் இயக்கங்கள் போன்றோ புலிகள் இயக்கம் போன்றோ நாம் மக்களுடன் நடந்து கொள்ள முடியாது. அது நமது மாக்சிச லெனினிச வழிமுறையும் அல்ல. நெறிமுறையும் ஆகாது. பொறுமையாக வும் நிதானமாகவும், மக்கள் மத்தியிற், கடந்த கால அனுபவா யிலாகவும் பட்டறிவுகளின் ஊடாகவும் வெகுஜன அடிப்படை யிலான அரசியல் வேலைகளை முன்னெடுத்துச் செல்வோம். இதில் எமக்கு நம்பிக்கை உண்டு.

**வலைத்தளத்தில் பின்னூட்டங்கள் வழியாக வாசகர்கள் கேட்டிருந்த கேள்விகளுக்கான பதில்கள்**

**இனியொரு: உலகமயமாதலின் உற்பத்தி உறவுகள் என்ன? சந்தைப் பொருளாதாரம் எவ்வாறு அமையும்? தேசிய முதலாளித்து வம் இல்லாத நிலையில் தேச விடுதலை யாருக்கு?**

**பதில்:** உலகமயமாதல் என்பது முதலாளித்துவ உற்பத்தி முறையினைத் தமது ஏகபோக மூலதனத்தின் மூலம் விரிவுப டுத்தி அதனை உறுதிப்ப டுத்துவதற்கான ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலாகும். அதன் அடிப்படையில், கடந்த முப்பது ஆண்டு காலப் பகுதியில் அதன் உற்பத்தி உறவுகள் நவ-தாராள பொருளாதாரம் என்பதன் வாயிலாக முன்னெடுக்கப்பட்டு வந்து ள்ளன. பல்தேசிய நிறுவனங்களின் மூலதன விரிவாக்கல், தனியார்மயம், தாராள சந்தை, நுகர்வுத் திணிப்பு, போன்றன பரந்த உலகமயமாக்கம் பெற்றுள்ளன. அதே வேளை, நாடு களின் வளங்களை வாரிச் செல்லல், குறைந்த கூலியில் உழைப்புச் சுரண்டல், பெருலாபம் குவித்தல், தேசியப் பொருளா தாரத்தைச் சிதைத்தல், சுயசார்புக் கொள்கைகளை அழித்தல் என்பன தொடர்ச்சியாக முன்னெடுக்கப் படுகின்றன. நவீன தொழில் நுட்பமானது உலகமயதாலுக்கு முக்கிய கருவியாகப் பயன்படுத்தப் பட்டும் வருகிறது. இவற்றுடன், அரச சார்பற்ற நிறுவனங்களின் பண வாரியிறைப்பு மூலமான அரசியல் நீக்க நடவடிக்கைகளும் சமூக, பண்பாட்டுச் சீரழிவுகளும் தொடரப் படுகின்றன. இவற்றுக்கு இசைவானவையாகக் கருத்தியல் தளத்தில் பின்-நவீனத்துவம் தாராள அரசியல், என்பன பரப்புரை செய்யப்பட்டு வர்க்கப் போராட்ட அரசியல் மாக்சிசம், சோசலி ஷம் என்பன மறுக்கப் படுகின்றன. அதே வேளை, இன மத மொழி பிரதேச வேறுபாடுகளினதும் தேசியத்தின் பெயராலும்

உருவாக்கப்படும் மோதல்கள் யுத்தங்களாக மாற்றப் படுகின்றன. அரசாங்கங்களுக்கும் விடுதலையின் பெயரிலான போராட்டங்களுக்கும் நேரடி, மறைமுக ஆயுத விற்பனை செய்வதுடன் ராணுவத் தலையீடுகளை மேற்கொள்ளலும் தொடர்கிறது. இவை யாவும், சமகால உலக முதலாளித்துவ மூலதன விரிவுக்கும் உற்பத்திக்கும் அதன் உறவு முறைகளுக்குமாக ஏகாதிபத்தியத்தால் முன்னெடுக் கப்பட்டு வரும் நவகொலனிய அமைப்பை வலுப்படுத்தும் நிகழ்ச்சி நிரலேயாகும்.

மேலும், சந்தைப் பொருளாதாரம் என்பது முதலாளித்துவப் போட்டியையும் பெருலாபம் குவிப்பதையும் குறியாகக் கொண்டதாகும். இது மனிதர்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கிலான உற்பத்தியையும் நுகர்வையும் நிராகரித்து, தனிநபர்கள் லாபத்தைப் பெருக்கிப் பணம் குவிக்கும் வழிமுறைகளிலேயே செயற் படுகிறது. இதற்கு மாறாக, மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய சோசலிஷப் பொருளாதாரம் தோற்றம் பெற்று வளர்ந்து வந்தது. ஆனால் முதலாளித்துவம் பல வழிகளிலும் அதனை முறியடித்து தோல்வியுறச் செய்து விட்டது. சந்தைப் பொருளாதாரத்தை நிராகரித்து வந்த முன்னாள் சோசலிஷ நாடுகள் எனப் பட்டவை கூட, இன்று இச் சந்தைப் பொருளாதாரத்தில் பங்கு கொண்டு தமது சோசலிஷப் பொருளாதாரத்தைப் பலியிட்டு விட்டன. இதற்கு உதாரணமாக நாம் காணக் கூடியது தான், முன்னைய சோசலிஷ சீனாவின் சோசலிஷப் பொருளாதாரமும் தற்போதைய முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தின் மீதான சீனாவின் மாற்றமடைந்த நிலையுமாகும். எனவே முதலாளித்துவச் சந்தைப் பொருளாதாரமே இன்று உலகப் பொருளாதார ஒழுங்காக அமைந்து ஆதிக்கம் பெற்று நிற்கிறது. இச் சந்தைப் பொருளாதாரப் போட்டி மனப்பான்மை மக்கள் மனங்களின் திணித்துப் பதியவைக்கப்பட்டு எங்கும் எதிலும் போட்டியும் குறுக்குவழிகளும் எப்படியாவது தனித்தனியே ஈடேற்றம் காணபது என்ற வரிசையில் மக்களை நிறுத்தியுள்ளது.

கடந்த முப்பது ஆண்டுகளில் தேசிய முதலாளித்துவ அரசுகள்

ஏகாதிபத்திய உலகமயமாதலால் உள்வாங்கப்பட்டதுடன் அதன் தேசியத் தன்மைகள் கழுத்து நெரிக்கப்பட்டு சிதைக்கப் பட்டுள்ளன. இதனை இலங்கையில் தெளிவாகக் காணமுடிந்து ள்ள அதே வேளை, பின் தங்கிய உலக நாடுகளின் தேசிய அரசுகள் எனப்பட்டவற்றுக்கும் அதே கதிதான் ஏற்பட்டுள்ளது. தேசிய அரசுகள் மட்டுமல்றி தேசிய விடுதலைப் போராட்ட சக்திகள் எனத் தம்மைக் கூறிக்கொண்டு அரங்கினில் மேற் கிளம்பித் தேசிய குணாம்சங்களை வெளிப்படுத்திய விடுதலை அமைப்புகள் கூட ஏகாதிபத்திய அரவணைப்புக்கு உள்ளாகி உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்குத் தம்மை இரையாக்கிக் கொண்டன. இதற்கும் இலங்கையில் இடம்பெற்ற நிகழ்வுகள் அனுபவமாகி உள்ளன. அதேவேளை, இவ் உலகமயமாதலின் நச்சுத் தனங்களை எதிர்த்து நிற்பதில் குறிப்பிட்ட தேசிய சோஷலிச அரசுகள் தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியும் வருகின்றன என்பதும் கவனத்திற்குரியதாகும். மேலும் தேச த்தின் விடுதலைக்கு தேசிய முதலாளித்துவம் அவசியம் என்ப தும் தேசிய முதலாளித்துவம் இன்றி தேச விடுதலை சாத்தியமி ல்லை என்பதும் தவறான கருதுகோள்கள் ஆகும். ஏனெனில், தேசிய முதலாளித்துவம் ஊசலாட்டம் மிக்கதும் குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் செல்ல முடியாது ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்யக் கூடியதுமா கும். எனவே வர்க்கப் போராட்ட அடிப்படையில் அணிதிரளும் தொழிலாளர்களும் விவசாயிக ளும் பிற உழைக்கும் மக்களும் தேசிய முதலாளித்துவத்திற் குப் பின்னால் இழுபட்டுச் சென்று தமக்கான விடுதலையை வென்றெடுக்க முடியாது. தமக்குரிய தேச விடுதலையைத் தமது சொந்தத் தலைமையைக் கட்டியெழுப்பி தமக்கான பாதையில் மக்களை அணிதிரட்டிப் போராடியே வென்றெடுக்க முடியும்.

**இனியொரு: தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கு தேசிய விடுதலைப் போராட்டம் என்பது அவசியமானதா? தேசிய இயக்கங்கள் தேவையா?**

பதில்: வரலாற்று ரீதியான இலங்கையின் இன்றைய யதார்த தம், இத் தீவு நாடு, பல்லினத் தேசியங்கள் வாழும் நாடென் பதும் இங்கு சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ்த் தேசிய இனங்களும் ஏனைய சிறுபான்மைச் சமூகங்களும்

வாழ்ந்து வருவதுமாகும். இங்கு பிரிவினையை ஏற்படுத்தி எந்தவொரு தேசிய இனமும் வாழ முடியாது. ஆனால், தேசிய இனங்கள் தம்மை எதிர் நோக்கி நிற்கும் பேரினவாத ஒடுக் குமுறையை எதிர்த்து சுயநிர்ணயத்தை வென்றெடுப்பதற்குப் போராட முடியும். போராடவும் வேண்டும். ஒடுக்குமுறைக்கு உள்ளாகி நிற்கும் மூன்று தேசிய இனங்களும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான சுயாட்சியை முன்னிறுத்திய தமது கோரிக்கையை முன்வைத்த போராட்டங்களைத் தனித் தனியாகவும் கூட்டாகவும் முன்னெடுக்க வேண்டும். இவை ஒன்றை ஒன்று நிராகரிக்காத நிலையிலும் ஆளும் வர்க்கத்தின் பிளவுபடுத்தி மோத வைக்கும் சூழ்ச்சிக்கு உட்படாதவாறும் தமக்குள் ஒரு பொது வேலைத்திட்டத்தை உருவாக்கிக் கொள் வது அவசியமானதாகும். எனவே, தேசிய இனப் பிரச்சினை கூர்மையடைந்துள்ள நிலையில், தேசிய இன விடுதலைப் போராட்டம் என்பது தவிர்க்க முடியாத அவசியப்பாடாக அமைகிறது. இதுவே இலங்கையின் இன்றைய யதார்த்தமாக உள்ளது.

**இனியொரு: தமிழ் மக்களின் புதிய போராட்ட மார்க்கம் எது?**

பதில்: தமிழ் மக்களின் பேரில் முன்னெடுத்த முன்னைய போராட்டங்கள் யாவும் தோல்வி கண்டுவிட்டன. ஏனெனில் உறுதியான வெகுஜனப் போராட்டம் தமிழர் தலைமைகளால் இதுவரை முன்னெடுக்கப் படவில்லை. பாராளுமன்றப் பாதைக் கும் அராஜகங்கள் நிறைந்த ஆயுதப் போராட்டத்திற்கும் அப்பாலான புரட்சிகர வெகுஜனப் போராட்டமே புதிய மார்க்க மாக அமைய முடியும். இப் போராட்டத்தின் மையமும் பலமும் பரந்துபட்ட மக்கள் சக்தியாக மட்டுமே இருக்க முடியும். கொள்கை வகுப்பதிலும் போராட்டங்களை முன்னெடுப்பதிலும் மக்களின் பங்களிப்பு அடிப்படையானதாக அமைய வேண்டும். தம்மை எதிர் நோக்கும் பேரினவாத ஒடுக்கு முறைக்கு எதிரா கத் தாமே முன்னின்று போராடுபவர்களாக மக்கள் இருக்க வேண்டும். தமிழர் மேட்டுக்குடி வழிவந்த உயர் வர்க்கத் தலைவர்கள் வகுக்கும் கொள்கைகளாலோ அல்லது இளைஞர் களின் தோள்வலிமையை மட்டும் நம்பிய சிறு முதலாளியப் போராட்டங்களாலோ தமிழ்த் தேசிய இனமோ ஏனைய தேசிய இனங்களோ தமக்கான விடுதலையைத் தேடிக் கொள்ள முடி

யாது என்பதே உண்மையாகும்.

**இனியொரு: 9/11க்குப் பிந்திய உலக ஒழுங்கில் விடுதலைப் போராட்டங்கள் பயங்கரவாதமாகப் பார்க்கப்படும் நிலையில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையை சாத்தியமாக்குவது எப்படி?**

**பதில்:** அமெரிக்காவின் தலைமையிலான ஏகாதிபத்தியம் 9/11ன் பயங்கரவாதத் தாக்குதலையும் அதன் காரணமாகக் கொல்லப்பட்ட சுமார் மூவாயிரம் வரையான மக்களின் அகால முடிவையும் தனது உலக மேலாதிக்கத்திற்கான பாதைக்கு உரமாக்கிக் கொண்டது. அதனை வைத்தே தனது ஏகாதிப த்தியப் பயங்கரவாதத்தை ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் அப்பட்டமாகவே தனது கூட்டாளி நாடுகளுடன் இணைந்து கட்டவிழ்த்துக் கொண்டது. அத்துடன் உலகின் ஒவ்வொரு நிலையிலும் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த போராட் டச் சக்திகள் ஒடுக்கப்படுவதற்குரிய சர்வதேச சூழல் உருவா க்கப்பட்டது. இங்கே நாம் தூர நோக்கிலும் வரலாற்று வளர்ச்சி மீதான நம்பிக்கையிலும் மக்கள் தான் தீர்க்கமான வரலாற்று உந்து சக்தி என்ற உண்மையிலும் இருந்தே ஏகாதிபத்தியத் தையும் அது காலத்திற்கு காலம் கட்டவிழ்த்து விட்டு வரும் பரப்புரைகளையும் அதன் பயங்கரவாத நடவடிக்கைகளையும் முறியடிக்க வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் நீண்ட காலத்திற்கு உலக மக்களை ஏமாற்றவோ அடக்கவோ முடி யாது. ஒவ்வொரு நாட்டினதும் ஒடுக்கப்படும் மக்கள் தமது நியாயமான போராட்டங்களை மக்கள் போராட்டங்களாக உரிய தந்திரோபாயங்களுடன் முன்னெடுப்பதில் உறுதியாக முன்னேறும் போது பயங்கரவாதம் என்ற பதத்தின் உண்மைத் தன்மையை மக்கள் புரிந்து கொள்வார்கள். அப்போது பயங்கர வாதம் என்று பரப்புரை செய்யப்பட்டதால் ஏற்பட்ட பாதகமான சூழலை உலகின் ஒடுக்கப்பட்ட மக்கள் தமக்குச் சாதகமான ஒன்றாக மாற்றிக் கொள்வார்கள். இது கடினமானதொன்றா யினும், மக்கள் முன்னேறிச் செல்லும் போது ஏகாதிபத்தியத் தால் நின்று பிடிக்க முடியாது போய்விடும். அப்போது, ஏகாதி பத்தியம் உட்பட எல்லாப் பிற்போக்காளர்களும் இறுதியில் காகிதப் புலிகளாகி விடுவர் எனத் தோழர் மாஓ சேதுங் கூறி யது சாத்தியமாகிவிடும்.

**இனியொரு: கேணல் கருணா ஜனநாயக அரசியலுக்கு வந்து தேசிய அரசியலில் தேசியக் கட்சியின் தலைவர்களில் ஒருவராகும் நிலை உலக அரசியலுக்குப் புதிய படிப்பினையும் முன்னுதாரணமும் என்று சொல்கிறார் சுகன். இது குறித்து தங்கள் பார்வை என்ன?**

பதில் : இதில் எந்தவிதமான படிப்பினையையும் முன்னுதார ணத்தையும் காண முடியவில்லை. அதே விதமாக ஆயுதம் தூக்கி நின்றவர்கள் ஏற்கனவே அரசாங்கங்களுடன் இணைந்தும் அமைச்சர் பதவியில் இருந்தும் வருகிறார்கள். புலிகள் இயக்கத்தில் இருந்தும் கிழக்கில் இருந்தும் கருணா பதவி பெற்றிருப்பது தான் ஒரே வேறுபாடாகும். கடந்த கால ங்களில் பேரினவாத முதலாளித்துவ அரசாங்கங்களில் தமிழ்த் தேசியவாதக் கட்சிகளில் இருந்து அவ்வப்போது ஆளுங் கட்சிகளில் அங்கம் பெற்று அமைச்சுப் பதவிகளில் இருந்து வந்திருக்கிறார்கள். அந்த வரிசையில் தற்போது இணைந்திரு ப்பவரே கருணாவாவார். இதனால் தேசிய இனப் பிரச்சினை யையும் பேரினவாத ஒடுக்குமுறையையும் எதிர்நோக்கி நிற்கும் தமிழ் மக்களுக்கு எதுவித நன்மைகளும் கிடைக்காது. அத்த கைய நிலைப்பாடு, தனிமனித ஈடேற்றத்திற்கும் சலுகைகளுக் கும் உதவக் கூடும். அதனை ஆளும் வர்க்கம் நன்கு பயன்ப டுத்திக் கொள்ளவே செய்யும்.

**இனியொரு : "புலிகளின் அரசியல் தோல்வி, ஆசிய நாடுகளில் மேற்குலக நாடுகளுக்கு எதிரான அரசியல் இராணுவப் பொருளாதார வெற்றியாகும். இலங்கைத் தொழிலாளி வர்க்கம் நாடு தழுவிய வகையில் மீண்டும் இணைவதற்கு கிடைத்த வாய்ப்பு" எனத் தன்னை இடதுசாரியாகக் காட்டி வரும் தமிழரசன் கூறுகிறார். இது குறித்துத் தங்கள் பார்வை என்ன?**

**பதில் :** இலங்கையில் புலிகள் இயக்கம் தோல்வி கண்டுள்ளமை மேற்குலக நாடுகளுக்குக் கவலை தரக்கூடியதாக உள்ளதே தவிர, ஆசிய நாடுகளுக்கு கிடைத்த வெற்றி எனக் கொள்ள முடியாது. ஏனெனில் மேற்குலகம் திரை மறைவில் இருந்தே புலிகளுக்கான ஆதரவை வழங்கிவந்தது. அதே வேளை,

இலங்கை அரசாங்கத்திற்கும் போதியளவிற்கு ஆதரவைக் கொடுத்தும் வந்தது. உலக மேலாதிக்க நிலையில் அமெரிக் காவிற்கும் பிராந்திய மேலாதிக்க நிலையில் இந்தியாவிற்கும் இடையிலான மறைமுகப் பொருளாதார அரசியல் ராணுவப் போட்டியில், புலிகளின் தோல்வி அமெரிக்க மேற்குலகிற்கு இலங்கையைப் பொறுத்து ஒரு பின்னடைவு மட்டுமே. அதே வேளை இந்தியா இலங்கையில் ஆதிக்கம் செலுத்துவதில் வெற்றி நிலையைப் பெற்றுள்ளது. இதனை வைத்து இலங்கை யில் தொழிலாளி வர்க்கம் மீண்டும் ஒன்றிணைவதற்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்று கூறுவது மேலோட்டமானதேயாகும். இலங்கையில் தொழிலாளி வர்க்க ஒற்றுமைக்கு வேட்டு வைத்த காரணிகள் பலவுள்ளன. அதிற் பிரதானமானது பேரினவாத முதலாளித்துவ ஒடுக்குமுறையாகும். அதனைத் தவறான நிலைப்பாட்டிலிருந்து குறுந் தமிழ்த் தேசியவாதமாக முன் னெடுத்த சகலரும் தொழிலாளி வர்க்க ஒற்றுமையைக் குலைத் தவர்கள் தான். ஏன், பேரினவாத ஒடுக்குமுறையின் அக்கம் பக்கத் துணையாக இருந்த பாராளுமன்ற இடதுசாரிகளும் தொழிலாளி வர்க்க ஒற்றுமைக்குக் கேடு விளைத்தவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு ஏற்படாத வரை, தேசியவாதத்தை மூலதனமாகக் கொண்டுள்ள அனைத்து உயர் வர்க்க சக்திக ளும் தோற்கடிக்கப்படாத வரை, தொழிலாளி வர்க்கம் ஒன்றி ணைவதற்கு வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகின்றன. இதனைப் புலிகளின் தோல்வியால் மட்டும் மீட்டுவிடமுடியும் என்பது யதார்த்தத்தை மீறிய கற்பனை மட்டுமே.

**இனியொரு: இலங்கை அரசுக்கு ஆதரவாக கியூபா ஐ.நாவில் வாக்களித்தது குறித்து, அதன் வெளியுறவுக் கொள்கை சந்தர்ப வாதமானது எனத் தமிழ்த் தேசியவாதிகள் விமர்சனம் முன்வைக்கி றார்கள். இது குறித்து உங்கள் பதில் என்ன? அதே வேளை, கியூபப் புரட்சியின் ஆதரவாளரான பிரஞ்சு மாக்சியர் ரெஜி டெப்ரே "இனித், தேசியத்துடன் இணையாத சோசலிஷம் உயிர்வாழ முடி யாது" எனக் குறிப்பிட்டதை முன்னிலைப்படுத்தி தேசியவாதத்தின் அவசியம் பற்றிப் பேசப்படுவது பற்றிக் கூறுங்கள்.**

**பதில்:** கியூபா சோஷலிச நாடாகிலும், அமெரிக்க ஏகாதிபத்திய த்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வரும் பின்தங்கிய நாடாகவே இருந்து வருகிறது. அதேவேளை, ஏகாதிபத்திய நலகொலனித்துவப் பிடிக்குள் இருந்து வரும் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் ஏகாதிபத்திய உள்நோக்கங்களுக்கு உதவும் வகையில் சர்வதேச அரங்கில் கியூபா எந்தவொரு நிலைப்பாட்டையும் வகிக்க முடியாது என்பது சரியானதேயாகும். இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் அமெரிக்க மேற்குலகம் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. அதன் நோக்கம் உலக மேலாதிக்கத்தை வலுப்படுத்துவதேயாகும். எனவே கியூபா இலங்கைக்கு ஆதரவாக நின்றமை அமெரிக்க மேற்குலக உள்நோக்கங்களை முறியடிக்கும் வகையிலேயேயாகும். தமிழ்த் தேசியவாதிகள் எப்போதும் ஏகாதிபத்திய ஆதரவு நிலைப்பாட்டுடனேயே இருந்து வந்துள்ளனர். அந்த வகையில் கியூபா பற்றிய அவர்களது விமர்சனம் அர்த்தமற்றதாகும். அடுத்து "இனித், தேசியத்துடன் இணையாத சோசலிஷம் உயிர்வாழ முடியாது" என்ற ரெஜி டெப்ரேயின் கூற்று எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். **சோஷலிசத்துடன இணைந்த தேசியம் தான் உயிர் வாழ்ந்துள்ளதே தவிரத், தேசியத்துடன் இணைந்த சோஷலிசம் இறந்து போனதையே வரலாறு கண்டுள்ளது.** கியூபாவின் தேசியம் சோசலிசத்துடன் இணைந்து கொண்டதாலேயே இன்றுவரை உயிர்வாழ்வதுடன் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சோசலிசமாக விருத்தி பெற்றும் கொண்டது. அதன் பாதையில் வெனிசுவேலா முதல் தென்ன மெரிக்க நாடுகள் பலவும் பயணித்து வருவதையும் காணமுடியும். முன்பு கிழக்குலகில் சீனாவிலும் வியட்நாம், கொரியா போன்ற நாடுகளிலும் தேசியம் சோசலிசத்துடன் இணைந்தே வெற்றி பெற்று உயிர் வாழ்ந்தமை வரலாற்று உண்மையாகும். எனவே தேசியம் உயிர்வாழ்வதற்கு ஏகாதிபத்தியமா அல்லது மாக்சிசமும் சோசலிசமுமா தேவை என்பதைத் தமிழ்த் தேசியவாதிகள் தீர்மானிக்கட்டும்.

**இனியொரு: "ஃபிடல் காஸ்ற்ரோ அமெரிக்காவை எதிர்க்கிறார் என்பதற்காக மட்டுமே நாம் இங்கு எதிர்க்கத் தேவையில்லை.... ஃபிடல் எதிர்ப்பது தனது தேசிய நலன்களிலிருந்தே அன்றி**

**உலகளாவிய நன்மைக்காகவல்ல என்ற உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்" என்ற வாதம் பற்றிச் சர்வதேசியவாதியான உங்களின் மறுமொழி என்ன?**

**பதில்:** ஒரு நாட்டினதும் கட்சியினதும் தலைவர் முதலில் தனது நாட்டினதும் மக்களினதும் நலன்களில் இருந்து தான் எதனையும் தொடங்க வேண்டும் என்பது சரியானதேயாகும். அதே வேளை, அத்தகைய நிலைப்பாடு உலக மக்களின் நலன்கள் தேவைகளுக்கு உகந்ததாகவும் இருப்பது அவசியம். அந்த வகையில் ஃபிடல் காஸ்ற்ரோ தனது நாட்டு நலன்களுக்காக மட்டுமன்றி உலக மக்களின் நலன்களுக்காகவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வந்துள்ளார். அவரதும் கியூபாவினதும் நிலைப்பாடு, உலகின் ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு உள்ளான மக்களின் பக்கமே இருந்து வருகின்றது. ஃபிடலின் எழுத்துக்களை உரைகளை ஆழமாகவும் ஆர்வத்துடனும் படிப்போருக்கும் அவதானிப்போருக்கும் அவை நன்கு புரியக் கூடியதாகும். இது அவரவர் கொண்டுள்ள உலக நோக்கின் பாற்பட்டதேயாகும். மாக்சிச உலக நோக்குடைய ஒருவரால் வர்க்கப் போராட்ட அடிப்படையில் ஒவ்வொரு பிரச்சினையையும் அணுகித் தெளிவான முடிவிற்கு வரமுடிகிறது. அவ்வாறு இல்லாதவர்கள் பழைமைவாத நிலவுடைமை வழிவந்த கருத்தியற் சிந்தனைகளிலான உலக நோக்கின் அடிப்படையில் விடயங்களை அணுகி நிற்க நேர்கிறது. இவ்விரு உலக நோக்குக்களினதும் வழியாகவே ஒருவர் சர்வதேசியவாதியாக இருப்பதும் மற்றவர் தேசியவாதியாக, அதற்கும் அப்பால் குறுந்தேசிய வாதியாக நின்று விடயங்களை அணுகுவதும் நிகழ்கிறது. இதனையே சுகன், யசீந்திரா என்போர் மட்டுமன்றி ஏனையோரின் உரையாடல்களிலும் காணமுடியும். இத்தகையவர்கள் எந்த உலக நோக்கின் அடிப்படையிற் புதிய சிந்தனைகள் தமக்குத் தேவை என்று கூறுகிறார்கள் என்பதே முக்கியமான கேள்வியாகும்.

**இனியொரு: தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக நீங்கள் கருதுவது எதை என்பது பற்றியும் அதற்கான நியாயங்கள் பற்றியும் சற்று விரிவாகக் கூற முடியுமா?**

பதில்: தமிழ், முஸ்லிம் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களான

வடக்கு-கிழக்கில் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சி, உள் சுயாட்சி அமைப்புகளைக் கொண்டுவந்து தமது விவகாரங்களைத் தலையீடோ குறுக்கீடோ இன்றித் தாமே முன்னெடுக்கக் கூடிய வகையிலான அரசியல் தீர்வையே நாம் வற்புறுத்தி நிற்கின்றோம். இதனை அரசியலமைப்பு வாயிலாக உறுதி செய்வதன் மூலம் ஐக்கியப்பட்ட இலங்கையில் தேசிய இனத் தனித்துவங்களுடன் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ முடியும். அவ்வாறே மலையகத் தமிழ்த் தேசிய இனமும் செறிந்து வாழும் மலையகப் பிரதேசங்களில் அவர்களது இருப்பையும் வாழ்வையும் தனித்துவங்களையும் உறுதி செய்து முன்னெடுக்க கூடியதான சுயாட்சி அமைப்புகளையும் உள் சுயாட்சி அமைப்புக்ளையும் ஏற்படுத்த வேண்டும். இத்தகைய அரசியல் தீர்வை வென்றெடுப்பது கடினமானதொன்றாயினும் அதனைச் சிங்கள உழைக்கும் மக்களின் ஒத்துழைப்புடன் பெறமுடியும் என்பது முக்கியமானதாகும்.

இதற்கு அப்பால், தமிழீழம் என்னும் பிரிவினைக் கோரிக்கை ஏதாவது ஏகாதிபத்திய சக்தியின் முன் முயற்சியால் மட்டுமே சாத்தியமாக முடியும். அண்மைய வருடங்களில் கொசோவாவை அமெரிக்காவின் தலைமையில் பிரித்தெடுத்துத் தனி நாடாக்கியமை போன்ற முயற்சியால் தமிழ் மக்கள் விடுதலை பெற முடியாது. அது ஏகாதிபத்தியத்திற்கு இடம் தேடிக் கொடுப்பதாகவே இருக்க முடியும். மேலும் இலங்கையானது சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேலான காலப்பகுதியின் ஊடாகத் தொடர்ச்சியான நாகரிகத்தை கொண்டதொரு நாடாக இருந்து வந்திருக்கிறது. சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் என்போர் இதிற் பங்களிப்பு வழங்கி வந்தபோதும், சிங்கள மக்களே பெரும்பான்மையினராகப் பௌத்த மதம் தமக்குரிய மேன்மையான மதம் என்ற நிலைப்பாடும் பேணப்பட்டு வந்துள்ளது. சிங்கள இனம் என்பது இலங்கைக்கு அப்பால் எந்தவொரு நாட்டிலும் இல்லாத ஒரு இனமாகும். இந் நிலையில் தமது நாடு பிரிக்கப்படுவதை எந்தச் சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்

என்பது யதார்த்தமானதாகும். இத்தகைய யதார்த்தத்தை மீறியதாக ஒரு ஏகாதிபத்தியத்தால் கடும் அழிவின் ஊடாகத் தமிழீழம் என்பது பெறப்பட்டாலும், நிரந்தர யுத்தமும் இரத்த ஆறும் ஓடிக்கொண்டிருக்கவே அது வகை செய்யும். உதார ணத்திற்கு, இன்றைய இஸ்ரேல்-பலஸ்தீன அவலநிலை போன்றதாகவே அது அமையும். ஆதலினாலேயே இலங்கை யின் நீண்ட வரலாற்று வளர்ச்சியில் பல்லினங்கள் தத்தமது மொழி, மத, பண்பாட்டுத் தனித்துவங்களுடன் வாழ்ந்து வரும் சூழலில் பல்லினத் தேசியத்தை ஏற்றுக் கொண்ட சுயாட்சித தீர்வே சாத்தியமாகக் கூடியதாகும்.

**இனியொரு: வெளிநாட்டு உதவியில்லாமல் தமிழ் மக்களுக்கான தீர்வு சாத்தியமில்லை என்று கூறப்படுவது பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

பதில்: இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்குப் பொரு த்தமான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றே எல்லா வெளிநாடு களும் கூறி வருகின்றன. அவற்றிற் சில நாடுகள் அதனை அழுத்தி வற்புறுத்தியும் வருகின்றன. அவ்வாறு அந் நாடுகள் வலியுறுத்துவதில் தவறு இருக்க முடியாது. ஆனால் இவ் விடத்தில் இரண்டு விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும். முத லாவதாக, இந் நாடுகளிற் சில, நல்ல நோக்கத்தோடு இல ங்கையில் இனப் பிரச்சினை தீர்க்கப்படுவதைச் சுட்டிக் காட்டி வருகின்றன. இரண்டாவதாகச், சில நாடுகள் தத்தமது சுயலா பம் கருதித் தீர்வு காணப்பட வேண்டும் எனக் கூறிக் கொண்டே எரிகிற பிரச்சினைக்கு எண்ணெய் வார்ப்பதில் ஈடுபட்டும் வந்து ள்ளன. இது தவறானதும் எதிர்க்கப்பட வேண்டியதுமாகும். எந்தவொரு போராட்டத்திற்கும் மக்களின் விடுதலைக்கும் வெளிநாட்டு உதவி என்பது பயனுள்ளதாகும். இதில், முதலா வதாக, அவ்வுதவி அந் நாடுகளின் மக்களது உதவியாக அமைய வேண்டும். இரண்டாவதுதாக, அரசாங்கம் எதுவா கிலும் வழங்கும் உதவி, அதன் நலன்களில் இருந்து தொடங் கும் உதவியாக அல்லாது, தீர்வு வேண்டி நிற்கும் மக்களின் நலன்களையும் இருப்பையும் எதிர்காலத்திற்கான அடிப்படைக

ளையும் வற்புறுத்துவதாக அமைய வேண்டும். எவ்வாறாயினும் எந்தவொரு போராட்டத்திலும், முழுமையான ஈடுபாடும் பங்கு கொள்ளலும் தமது தலை விதியைத் தாமே தீர்மானிப்பதும் சம்பந்தப்பட்ட மக்களாக இருப்பதே முதன்மையானதும் அடிப்ப டையானது மாகும். வெளிநாட்டு உதவி இரண்டாம் பட்சமான தாகும். இன்றைய உலகச் சூழலில், நேர்மையான உள்நோ க்கமற்ற வெளிநாட்டு உதவி ஒரு போராட்டத்திற்குத் தேவை யானதே. அதைக் கவனமாகக் கையாள்வதிலேயே போராட்டச் சக்திகளின் பலம் பலவீனமும் வெற்றி தோல்விகளும் ஒரு பங்கினை ஆற்றுகின்றன. உதாரணத்திற்கு, இந்திய மக்களின் ஆதரவும் உதவியும் அவசியமானது. அதே வேளை, இந்திய ஆளும் வர்க்கத்தின் உதவியை நாடி அடிபணிந்து நிற்பது அடிமைத்தனமானதும் தமிழ் மக்களின் விடுதலைக்கு விரோ தமானதுமாகும்.

**இனியொரு: மாக்சிஸ்ட்டுகள் பாராளுமன்ற அரசியலை எதிர்ப்ப வர்கள். பாராளுமன்ற அரசியலுக்கு வெளியால் ஒரு தீர்வைப் பெற முடியுமா? தேர்தல்களில் பங்கு பற்றுவது குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில் : மார்க்சிஸ்டுக்கள் முதலாளித்துவ பாராளுமன்ற அரசியலை எதிர்ப்பவர்கள் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. அதில் நேர்மையான மாக்சிஸ்ட் லெனினிஸ்டுக்க ளால் மட்டுமே அந்த எதிர்ப்பு நிலைப்பாட்டை உறுதியாகப் பின்பற்றி நிற்க முடியும். ஏனெனில் இன்று இலங் கை, இந்தியா மற்றும் தென்னாசிய நாடுகளில் பின்பற்றப்படும் பாராளுமன்ற ஆட்சி முறைக்கான அரசியல் யாப்புகள் யாவும் நிலவுடைமை வழிவந்த மேட்டுக்குடி முதலாளித்துவ சக்திகளால் கொல னியவாதிகளிடம் இருந்து கையேற்ற பாராளுமன்ற ஆட்சி முறையைக் கொண்டவை. மக்கள் ஆட்சிக்கோ தேசிய இனங் களின் மீட்சிக்கோ அங்கே எவ்விதமான இடமும் இல்லை. எனவே அத்தகைய பாராளுமன்ற ஆட்சி முறையால் ஒரு சமூக மாற்றத்தையும் அதன் மூலம் சோசலிசத்தையும் கொண்டு வந்து விட முடியும் என எவரும் கற்பனை பண்ண முடி யாது.

அதே வேளை, பாராளுமன்ற அரசியலில் நிர்ப்பந்தமாகப் பிணைக்கப்பட்டு அதன் போதை மயக்க நிலையில் இருந்து வரும் மக்கள் பெருந்திரளினரை மீட்கும் வகையில் நமது அரசியல் பரப்புரைகளை முன்னெடுத்துச் செல்ல ஒரு அரங் காகப் பாராளுமன்ற அரசியலைப் பயன்படுத்த முடியும். பயன் படுத்தவும் வேண்டும். ஆனால் இது வாள் மீது நடப்பது போன்றதாகும். பாராளுமன்ற அரசியல் மயக்கத்திலிருந்து மக்களை மீட்பதற்கும் அதனை அம்பலப்படுத்தி நிராகரிக்கச் செய்யவும் அதனை அரங்காகப் பயன்படுத்துவதில் ஒரு குறிப் பிட்டளவு தூரத்திற்கு மட்டுமே செல்ல வேண்டும். அதற்காகப் பாராளுமன்றத் தேர்தல்களில் வரையறுக்கப்பட்ட வழிகளில் பங்குபற்றுவது சரியானதேயாகும். இதில், பகிஷ்கரிப்பு அல்லது நிராகரிப்பு என்பதைப் பற்றி விறைப்பான தீர்மானத்திற்கு வரமுடியாது. பங்கு கொள்வதா நிராகரிப்பதா என்பதனை அவ்வப்போதைய சூழலே தீர்மானிக்கும். அதே வேளை, பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலுக்குள் மூழ்கிக் கொள்ளா தவாறு தற்காத்துக் கொள்வது அவசியமானதாகும்.

**இனியொரு: இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசிடம் சரணடைந்து விட்ட நிலையில், தமிழ் மக்களுக்கான நியாயமான மாற்று அரசியல் சக்திகள் உருவாவது சாத்தியமா? அதற்கான சூழ்நிலை இலங்கையில் இன்று நிலவுகின்றதா?**

பதில் : இலங்கையில் நிலவுடைமை வழிவந்த மேட்டுக்குடி முதலாளித்துவ கருத்தியல், சிந்தனை, நடைமுறை என்பன இன்றும் மிகக் கெட்டியானவையாகவே இருந்து வருகின்றன. அதன் வழியிலான பாராளுமன்ற அரசியலே கடந்த 62 வருட ங்களாக நடப்பில் இருந்து வந்துள்ளது. இதற்குத் தமிழர் அரசியல் விலக்கான ஒன்றல்ல. பாராளுமன்றப் பாதையிலும் பின்பு ஆயுதப் போராட்ட வழிகளிலும் அந்த அரசியலே தலைமை தாங்கிச் சென்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது மேற்கூறிய இரண்டினதும் உறுதியான கலவையாகவே உள்ளது. அவர்கள் எங்கிருந்தாலும் அவர்களது தலைகளுக் குள் பழைமைவாத நிலவுடைமை முதலாளித்துவக் கருத்தி

யலே நிறைந்திருக்கிறது. அதன் ஊடான பாராளுமன்றப் பதவி மோகமும் தமிழர் மத்தியில் தமது ஆதிக்க அரசியலின் தொடர்ச்சியைக் கொண்டிருக்கவுமான அடிப்படையுமே அவர்களது நிலைப்பாடாகும். இதற்காகத் தனித்தும் நிற்பா ர்கள். பிரபாகரனுடனும் இருப்பார்கள். பின்பு மகிந்த ராஜபக் ஷவுடனும் பேசுவார்கள். ஆனால் தாங்கள் தமிழ் மக்களுக்கு இழைத்த மோசமான அரசியல் துரோகம் பற்றி ஒரு வார்த்தை தானும் சுயவிமர்சனம் செய்ய மாட்டார்கள். ஏனெனில் சுய விமர்சனம் என்பது தவறுகளைக் கண்டு உணரவும் திருத்தி அமைக்கவும் புதிய கொள்கைகளை உள்வாங்கவும் பயன்படும் ஒரு ஆரோக்கியமான வழிமுறையாகும். அதனைச் செய்யத் தயாரில்லாத நிலையில் ஏற்கனவே இருக்கும் பாராளுமன்ற ஆசனங்களை மீளவும் பெற்றுக் கொள்ளும் வழமையான பாதையிலேயே தமிழ்க் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு ஒரு முகத்தையும் தமிழ் மக்களுக்கு மற்றொரு முகத்தையும் காட்டி மெல்ல மெல்ல அரசியல் அரங்கில் மீண்டும் தோன்ற ஆரம் பித்துள்ளது. அவர்களுக்கு முதலில் தேவைப்பட்டது ஜனாதிப தியையும் அரசாங்கத்தையும் அணைத்து இணங்கிப் போவது. இரண்டாவது, பழைமைவாத அரசியல் பாரம்பரியத்தை தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுப்பது. அதற்கான வழிமுறைகள் அவர்களுக்குக் கைவந்தவை. அழிந்துபோன புலிகளின் தலை களில் எல்லாவற்றையும் சுமத்திவிட்டுத் தம்மைப் புனிதர்களா க்கிக் கொள்ளும் முயற்சியிலேயே தற்போது ஈடுபட்டு ள்ளனர். இந் நிலையில், நியாயமான மாற்று அரசியல் சக்தி அவசி யமானதேயாகும். அதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன. ஆனால் அச்சாத்தியப்பாட்டை மகிந்த சிந்தனை அரசாங்கமும் விரும்பமாட்டாது. அதே போன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பும் ஏற்றுக் கொள்ளமாட்டாது. இரு புறத்திலும் தத்தம் பேரினவாத-குறுந்தேசியவாத ஆதிக்க அரசியலைக் கருத்தியல் ரீதியாகவும் நடைமுறை வாயிலாகவும் முன்னெடுக்கவே நாடி நிற்கிறார்கள். வடக்கிலும் கிழக்கிலும் இதனையே இன்று காண முடிகிறது.

இவற்றுக்கு அப்பால், மாற்று அரசியல் சக்தி என்பது தமிழ்

மக்கள் மத்தியில் தோற்றுவிக்கப்படல் வேண்டும். அத்தகைய ஒரு சூழ்நிலையைத் தனி ஒரு கட்சியாலோ சில தனிநபர்க ளாலோ தோற்றுவிக்க முடியாது. முதலில் இதுவரையான ஆதிக்க அரசியலுக்குப் பதிலான ஜனநாயகத்தை முன்னுறுத் தும் வகையிலான அரசியல் நிலைப்பாடு தோற்றுவிக்கப்படல் வேண்டும். தமிழர் மத்தியிலான நிலவுடைமைக் கருததியல் சிந்தனை நடைமுறைகளைத் தகர்க்கக் கூடியதான மாற்று அரசியலாகவே அந்த ஜனநாயகம் அமைய வேண்டும். இன, வர்க்க, சாதிய, பால் முரண்பாடுகளை மூடி மறைக்காது, அவற்றுக்கான கோரிக்கைகளையும் அரசியல் தீர்வுக்கான கோரிக்கையில் இடம்பெற வைப்பதே அந்த ஜனநாயக அரசிய லாக இருக்க முடியும். ஜனநாயகம் என்பது ஏகப்பெரும்பான் மையான மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டுமே அன்றி, ஆண்ட பரம்பரைக் கருத்தியல் கொண்டு ஜனநாயக முகமூடி தரித்த ஒரு சிலரின் விருப்பு வெறுப்பிற்கு உட்பட்டதாக அமையக் கூடாது. கடந்த முப்பது வருடகால உயிரிழப்புக்களினூடும் இரத்த வழிந்தோடல்களினூ டும் இழப்புக்களினூடும் துயரங்களினூடும் இன்று அனுபவிக்கும் பேரவலங்களினூடுமான பட்டறிவை அரசியல் அனுபவமாகக் கொண்டே மாற்று அரசியல் தோற்றுவிக்கப்படல் வேண்டும். இந்த மாற்று அரசியல் என்பது வெறுமனே ஆட்களை மாற்றி அவர்களின் இடத்திற்குப் புதியவர்கள் வருவதல்ல. கருத்தியல், சிந்தனை, நடைமுறையில் அடிப்படையான மாற்றம் அவசி யமாகும். அதன் மூலமான மக்கள் ஜனநாயக அரசியல் முற்போக்கான பாதையிலும் பாராளுமன்ற அரசியலுக்கான தாக மட்டுமன்றி வெகுஜன அரசியலுக்கானதாகக் கட்டமைக் கப்பட வேண்டும். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் சில இளம் சட்டத்தரணிகளைக் கூட்டமைப்பு அடுத்த தேர்தலில் களமிறக்க தயாராகுவதாக அறிய முடிகிறது. இவர்கள் மேட்டு க்குடி வந்த புதிய பரம்பரையினராகவே உள்ளனர். அதே போன்று, கடந்த காலங்களைப் போன்று மேனிலையா க்கம் பெற்ற தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் சிலரைத் தேர்ந் தெடுக்கவும் முயற்சி எடுக்கப்படுகிறது. இது பழைமைவாதப் பாழடைந்த அரசியலின் தொடர்ச்சியே என்பதில் ஐயமில்லை. எனவே இவை யாவற்றி னூடாகவும் எதிர் நீச்சலிட்டே தமிழ் மக்கள் மத்தியில் மாற்று அரசியலை மாற்றுச் சிந்தனைகளின்

வளர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும். இதனை நம்பிக்கையுடன் சாத்தியமாக்குவதற்கு பலதரப்பு முயற்சிகள் உள்நாட்டிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்தும் எடுக்கபபடல் வேண்டும்.

**இனியொரு: தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இலங்கையில் சாதியத்தை ஒழித்திருக்கிறது என்று சொல்லப்படுகிறதே. சாதி எதிர்ப்புப் போராட்டங்களில் பங்குபற்றியவர் என்ற வகையில் இது உண்மையா என்று சொல்ல முடியுமா?**

பதில்: தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் எனப்படுவதால் சாதியம் ஒழிக்கப்பட்டுள்ளது என்பதில் உண்மை எதுவும் இல்லை. அதற்கு நடைமுறை ஆதாரங்கள் இன்றும் இருந்து வருகின்றன. தமிழர்கள் மத்தியில் சாதியம் ஒரு அமைப்பாக இன்றும் பேணப்பட்டே வருகிறது. மாக்சிச லெனினிசவாதிக ளினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் பொது இடங்களில் இருந்து சாதிய தீண்டாமையை இல்லாமல் செய்து விட்டனவே அன்றிச் சாதியக் கருத்தியலையும் அதன் பாற்பட்ட சிந்தனை யையும் முற்றாக ஒழித்து விடவில்லை. பண்பாட்டுத் தளத்தில் ஆழப் பதிந்துள்ள சாதிய வேர்களை முழுமையாக அழிக் கவோ ஒழிக்கவோ முடியவில்லை. இன்றும் புலம் பெயர்ந்த நாடுகளிற் கால் நூற்றாண்டுக் கால வாழ்வுக்குப் பின்பும் சாதியம் கவனமாகப் பேணப்படும் சூழலில், இலங்கையில் அது ஒழிந்து விட்டது என எவ்வாறு கூறமுடியும்? வடபுலத்திற் சுழிபுரத்தில் அமைந்துள்ள பழம் பெரும் ஆலயமான பறாளை விநாயகர் ஆலயத்தில் 2001ம் ஆண்டில், கேணியைச் சுற்றி முட்கம்பி வேலி இடப்பட்டு இன்றும் அது பாதுகாக்கப்பட்டு வருவது தாழ்த்தப்பட்ட மக்கள் அதில் குளித்த ஒரே காரணத் திற்காகவேயாகும். அதே போன்று வடமராட்சி அல்வாய் திக்கம் பகுதியில் உள்ள துளசிப் பிள்ளையார் கோவிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்பதுடன் 2007ம் கிணற்றைச் சுற்றி முட்கம்பி வேலியும் இடப்பட்டுள்ளது. இவை யாவும் விடுதலைப் போராட்டம் இடம் பெற்றதாகக் கூறப்படும் காலத்திலேயே கடைப்பிடிக்கப்பட்டவை. இவற்றைச் சோற்றுப் பதம் எனக் கொள்ளலாம். வர்க்க, சாதிய, பால், முரண்பாடுகளையும் அதன் பாற்பட்ட ஒடுக்குமுறைகளையும்

தமது கொள்கை நிலைப்பாட்டில் அல்லது வேலைத் திட்டத்தில் விடுதலைப் போராட்ட சக்திகள் எனப்பட்டவை உள்வாங்கி அவறறுக்கான அரசியல் சமூக பண்பாட்டுத் தளங்களில் எந்த வொரு எதிர்க் கருத்தையோ பரப்புரையையோ தீர்வையோ முன்வைக்க வில்லை. எல்லாம் அப்படி அப்படியே இருக்கட்டும், தமிழீழம் கிடைத்த பின்பு அவற்றுக்குரிய தீர்வு காணப்படும் என்ற நியாயம் முன்வைக் கப்பட்டே தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலிருந்து இளைஞர்களும் யுவதிகளும் விடுதலைப் போராட்டத்திற்குத் திரட்டப்பட்டனர். இப்படிச் சொல்வது தமிழ்த் தேசிய இனத்தைப் பிளவுபடுத்தவும் தலித்தியம் என்பதற்கு வலுச் சேர்ப்பதற்கும் அல்ல. பழைமைவாக் கருத்தியலால் கட்டுண்டு நிற்கும் தமிழ் மக்களிடம் பரந்து பட்ட ஜனநாயக சூழலை உருவாக்கி அரசியல் போராட்டத்தை முன்னெடுக்கவே யாகும். அதனால் இச் சாதிய முரண்பாடு அவ்வப்போது இயக்கங்களில் மேலோங்குவதும் பின்பு துப்பாக்கிகளின் துணையுடன் அமுக்கப்படுவதுமாக இருந்து வந்தது. முப்பது ஆண்டு கால விடுதலைப் போராட்டமும் சாதியமும் என்றொரு ஆய்வு நடத்தப்பட்டால் வெளியில் தெரியாத பல விடயங்கள் வெளிச்சத்திற்கு வரும். குறிப்பான சில இயக்கங்கள் சாதியம், சோஷலிசம், மாக்சிசம் என்பன பற்றிப் பேசிக் கொண்டமைக்குக் காரணம் உழைக்கும் மக்களினதும் தாழ்த்தப்பட்ட மக்களினதும் மத்தியில் இருந்து இளைஞர்-யுவதிகளைத் திரட்டிக் கொள்வதற்காக மட்டுமேயாகும்.

மேலும் ஒரு நடைமுறை உதாரணம்: 2005ம் ஆண்டு மாவீரர் தின நிகழ்வாக யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஒரு விழாவில் அந்தந்தச் சாதியினரிடம் அவர்களுக்குரிய அமைப்புகளின் வாயிலாக நிதி திரட்டி அவர்கள் மத்தியில் மாவீரர்களாகியவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறும் வகையில் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. விழாவுக்கு முன்பாக வெண்மைச் சங்கத்தினர் (சலவைத் தொழிலாளர்கள்) சிலை அலங்காரச் சங்கத்தினர் (சவரத் தொழிலாளர்கள்) கடற் தொழிலாளர்கள் (மீனவர்கள்) போன்ற அமைப்புகள் தனித்தனி ஊர்வலங்களாகவே உரிய மண்டபத்திற்கு வருகை தருமாறு வேண்டப்பட்டனர். மாவீரர்களுக்குரிய அவ் விடுதலைப் போராட்ட அமைப்பு எவ்வாறு சாதியம் பேணியது என்பதை ஒரு கணம் சிந்தி

த்துப் பார்த்தால் விடுதலைப் போராட்டம் சாதியை ஒழித்ததா அல்லது பேணிக் கொண்டதா என்பதைக் காண முடியும்.

**இனியொரு: புலம்பெயர்ந்த நாடுகளில் பலர் இலங்கையில் தலித்தியம் பற்றிப் பேசி வருகிறார்கள். இந்தச் சொல்லாடல் சரியானதா? தலித்தியம் என்பது இலங்கையிலும் நடைமுறையில் உள்ளதா? சாதி அடுக்குகளுக்கு அப்பால் "தலித்" அடையாளம் பேணப்படுகிறதா? இந்த விடயத்தில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் வேறுபாடு உண்டா? இல்லையா?**

பதில் : தலித் என்னும் சொல் இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தி லிருந்து உருவாகிய ஒரு மராட்டிய மொழிச் சொல்லாகும். சமூகத்தின் அடி நிலையிலிருந்த மக்கள் பிரிவின ரைக் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களைக் குறிப்பதாகவே அமைந்தது. அச் சொல்லின் அர்த்தம், எளிமை, சுருக்கம், பிரயோகம் போன்றவற்றாலும் அதனைப் பயன் படுத்தியோரின் நிலைப்பாடு காரணமாகவும் அச் சொல்லாடலானது பல்வேறு மாநிலங்களிலும் பரவிக் கொள்ள வசதியாயிற்று. இந்தியாவில், ஒரு மாநில மொழிச் சொற்கள் குறிப்பிட்ட சூழலாலும் தேவை கருதியும் சமூகப் பொதுமை நிலையில் பிற மொழி மாநிலங்க ளில் ஏற்கப்படுவது சுதந்திரப் போராட்டக் காலத்திலிருந்தே இடம்பெற்று வந்துள்ளது. அந்த வகையில் தலித் சொல்லாடல் இந்தியா முழுவதும் சாதியத்தால் தீண்டாமையால் கொடூரமாக ஒடுக்கப்பட்டு வரும் தாழ்த்தப்பட்ட மக்களிடையே பரப்புரைக்கு உள்ளாக்கப் பட்டதுடன் தலித் மக்கள், தலித் அரசியல், தலித் இலக்கியம், தலித் பண்பாடு என்றெல்லாம் விரித்தும் கூறப்பட்டது. அச் சொல் அதன் அர்த்தத்திற்கும் அப்பால், ஒரு கவர்ச்சிகரமான பண்பைக் கொண்டிருந்தது. பின் நவீன த்துவக் கருத்தியலும் அதனை முன்னெடுத்த அரச சார்பற்ற நிறுவனங்களும் அதன் கனவான்களும் அரசியல் நீக்கத்திற காகக், குறிப்பாக வர்க்கப் போராட்ட அரசியலை நிராகரிப்பத ற்காக, இத் தலித்தியத்தைக் கையில் எடுத்தனர். இந்தியாவின் சூழலுக்கும் தேவைக்குமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் இச் சொல்லாடல் சரியானதா பிழையானதா என்று சொல்லும் உரிமை இந்தியாவின் தாழ்த்தப்பட்ட மக்களுக்குரிய ஒன்றே யாகும். ஆனால் ஒன்று மட்டும் நிச்சமானதாகக் கூறக்கூடியது. அதாவது இந்தச் சொல்லாடலாலும் அதன் பிரயோகத்தாலும்

இந்தியாவின் இருபத்தைந்து கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் எதையும் பெறவில்லை. ஆனால் பாராளுமன்ற அரசியல்வாதிகளும் மேனிலையாக்கம் அடைந்த தாழ்த்தப்பட்டோருள் வர்க்க வசதி வாய்ப்புப் பெற்றவர்களும் உயர்நிலைப் பதவிகள் பெற்றோரும் தாராளமாக நன்மை பெற்றுக் கொண்டனர். அமைச்சர், முதலமைச்சர், மாநில அமைச்சர் என மட்டுமன்றி, ஜனாதிபதி, சபாநாயகர் போன்ற உயர் பதவிகள் பெறவும் பணம் சேர்த்துச் சொத்துச் சுகம் அனுபவிக்கவும் தலித் சொல்லாடல் தாழ்த்தப்பட்ட மக்களின் பெயரால் தாராளமாகப பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

இந்த விடயத்தில் இலங்கை இந்தியாவிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். தலித் சொல்லாடலை கவர்ச்சிகரமாகப் பயன்படுத்தி தாழ்த்தப்பட்ட மக்களின் பெயரில் எவரும் பதவிகள் பெறவோ சொத்து சுகம் பெறவோ முற்பட்டதில்லை. ஏனெனில் அன்றும் இன்றும் தாழ்த்தப்பட்ட மக்களுடன் இருந்து வரும் மாக்சிச லெனினிசவாதிகள் அத்தகைய குறுகிய சுயநல வழிகளில் சென்றதும் இல்லை கடந்த காலப் போராட்டங்களைச் சுய லாபங்களுக்காகப் பயன்படுத்தியதும் இல்லை.

அந்த நிலைமைக்கு மாறாக, இலங்கையில் தலித் சொல்லாடலை அறிமுகப்படுத்தி தலித் அரசியலை முன்னெடுக்கப புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து சிலர் முயற்சி செய்கிறார்கள். ஆனால் அதற்கான சூழல் இலங்கையில் இல்லை. அவர்கள் செயற் கையாகவும் தனிநபர்கள் வாயிலாகவும் தலித் அரசியலை இலங்கைக்கு இறக்குமதி செய்ய முற்படுகிறார்கள். தலித் என்ற சொல்லாடல் மூலமாகக் குறுகிய சாதிவாதத்தையே தமது நோக்கிலும் போக்கிலும் கொண்டிருக்கிறார்கள். இன்று புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து பெரும்பாலான தாழ்த்தப்பட்டவர்கள் தமது சாதிய (தலித்) அடையாளத்தை மறைக்கவும் இழக்கவும் தயாராகி வருவதே யதார்த்தம். ஆனால் இலங்கையில் குறிப்பாக வடபுலத்தில் சாதிய அடு க்குகளும் அதன் பாற்பட்ட சாதிய அமைப்பும் உள்ளார்ந்த இறுக்கத்துடன் இருந்து வரவே செய்கிறது. அதனை முறியடி க்கத் தாழ்த்தப்பட்ட மக்கள் ஏற்கனவே புரட்சிகர வெகுஜனப் போராட்டப் பாதையில் இறங்கி வெற்றிகளும் பெற்றிருக் கிறார்கள். அந்தப் பாதையிலான பயணம் தொடரப்படுவதையே அம் மக்கள்

விரும்புகிறார்கள். அதுவே இலங்கையின் யதார் த்தமாகவும் இருந்து வருகிறது. அதனால் தலித் என்ற சொல்லாடலுக்குள் மறைந்துள்ள பல்வேறு மக்கள்-விரோதக் கருத்துக்களையும் நடைமுறைகளையும் இங்கு தாழ்த்தப்பட்ட மக்கள் அடை யாளம் காண்கிறார்கள். தமிழ் நாட்டின் தலித்தி யவாதிகளின் சீரழிவையும் மக்கள் விரோத செயற்பாட்டையும் கண்ட அனுபவத்தின் பின் அது நமக்குத் தேவையா என்ற கேள்வியே தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் கேட்கப்படுகிறது. புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள தலித்தியவாதிகள் தமிழ் நாட்டின் தலித்தியத்தை அதே வகையான பிளாஸ்ற்றிக் தாவரமாக இலங்கையில் நடுகை செய்து வளர்க்கக் கனவு காண்கின்றனர். இதற்குப் பின்னால், பல்வேறு உள் நோக்கங்கள் உள்ளன. குறுகிய சாதிவாதத்தால் மக்களைப் பிளவு படுத்தும் முயற்சி கடுமையாக எதிர்க்கப்பட வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளும் சமத்துவ ஜனநாயக வாழ்வும் வென்றெத்து நிலை நாட்டப்பட வேண்டும். அதைக் கொள்கை வழி நடை முறை கொண்ட போராட்டங்களால் முன்னெடுக்க முடியுமே தவிரத் தமிழ் மக்களைப் பிளவுபடுத்த நிற்கும் பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கத்திற்குத் துணை போவதன் மூலம் அல்ல என்பது உணரப்பட வேண்டும்.

**இனியொரு: இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் முஸ்லிம் மக்களும் மலையகத் தமிழ் மக்களும் உள்ளடங்கியுள்ளனர் என்பதை நீங்கள் வலியுறுத்தி வருகிறீர்கள். ஆனால் தமிழ்த் தேசியத்தை உயர்த்தி நிற்போர் குறிப்பாக புலம் பெயர்ந்த நாடுகளில் செயல்படுவோர் அதைப் பற்றி அக்கறைப்படுவதாக இல்லையே. இது பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்.**

பதில்: முஸ்லிம் சமூகமும் மலையகத் தமிழ்ச் சமூகமும் இலங்கையின் இரண்டு தேசிய இனங்களாக வளர்ச்சி பெற்று ள்ளன என்பதே இன்றைய யதார்த்தமாகும். அதே வேளை, அவ்விரு தேசிய இனங்களும் பேரினவாத முதலாளித்துவ ஆளும் அதிகார வர்க்கத்தின் இன ஒடுக்கு முறைக்கு உள்ளாகி வருபவர்களாகவே இருந்து வருகின்றனர் அத்துடன் மலையத் தமிழ் மக்கள் வர்க்க ரீதியில் கொடூர உழைப்புச் சுரண்டலுக் கும் உள்ளாகி வருகின்றனர் என்பதும் நிதர்சனமானதாகும்.

முஸ்லிம் மக்கள் இலங்கை முழுவதிலும் பரந்து வாழ்ந்து வந்த போதிலும் வடக்கு-கிழக்கைத் தமது பாரம்பரிய பிரதேச மாகக் கொண்டு வாழ்ந்து வரும் வரலாற்றுத் தொடர்ச்சி உள்ளவர்களாவர். இவர்கள் மதத் தனித்துவத்துடன் இருப் பினும் மொழியால், பிரதேசத்தால் வடக்கு கிழக்குத் தமிழ் மக்களுடன் இணைந்து வாழ்ந்து வருபவர்கள். இவ் இணைப் பைக் குலைப்பதில் பேரினவாத ஒடுக்குமுறையாளர் கள் மட்டுமன்றி தமிழ்த் தேசியவாதிகளும் முன்னின்று செயலாற்றி வந்திருக்கிறார்கள். இது முன்பிருந்தே தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் முஸ்லிம் மக்களை இரண்டாந்தரமாக நடாத்தி வந்ததன் தொடர்ச்சி என்றே கூற முடியும். மேலும் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே முரண்பாட்டை மோசமாக்கி மோத லாக்கிக் கொள்வதில் புலிகள் இயக்கமும் பேரினவாதச் சக்தி களும் அரசாங்கங்களும் அந்நிய சக்திகளும் திட்டமிட்டுச் செயலாற்றி வந்துள்ளன. கிழக்கில் முஸ்லிம் மக்கள் மீதான படுகொலை நிகழ்வுகள், வடக்கிலிருந்து முஸ்லிம்களை விரட்டி அடித்தமை ஆகியவற்றுக்கு இன்று வரை தமிழ்த் தேசியவாதி களிடமிருந்து உரிய பதில் கிடைப்பதாக இல்லை. அதே வேளை, அரசாங்கத்தில் அங்கம் பெறும் முஸ்லிம் அமைச்சர் களாலும் ஆதரவாளர்களாலும் முஸ்லிம் மக்களின் மீதான பேரினவாத ஒடுக்குமுறைகளைத் தடுத்து நிறுத்தவும் முடியவில்லை. இந் நிலையில் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்க ளுடன் இணைந்து நின்று தேசிய இனப் பிரச்சினையின் தீர்வு க்காக போராட வேண்டியது தவிர்க்க முடியாததாகி வருகிறது.

அவ்வாறே மலையகத் தமிழ்த் தேசிய இனம் இன-வர்க்க ஒடுக்குமுறைக்கு உள்ளாகி நிற்கும் நிலையே வளர்ந்து வந்துள்ளது. அவர்களது அடிப்படை வாழ்வுரிமைகள் அனை த்தும் இன அடிப்படையில் மறுக்கப்பட்டு வருகின்றன. அதே வேளை, இலங்கையில் ஆகக் குறைந்த நாட்கூலி பெறும் தொழிலாளர்களாக மலையக மக்களிடையே ஐந்து லட்சம் பேர் இருந்து வருகிறார்கள். இவர்களே இலங்கையில் பிரதான ஏற்றுமதியான தேயிலை இறப்பர் உற்பத்தியிலும் ஈடுபடுபவர் களாக உள்ளனர். வர்க்க ரீதியில் மிக மோசமாகச் சுரண்டப்

படும் இம் மலையகத் தமிழ் மக்கள் இன, மொழி, பண்பாட்டு ரீதியில் திட்டமிட்ட வழிகளில் ஒடுக்கப்படும் நிலையே காணப்படுகிறது.

ஆதலினாலேயே ஒடுக்கப்படும் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ்த் தேசிய இனங்கள் இலங்கையின் தேசிய இனப் பிரச் சினையில் இணைந்து நின்று போராட வேண்டிய சூழ் நிலையில் இருந்து வருகிறார்கள் என்பதை நாம் தொடர்ந்து சுட்டிக்காட்டி வலியுறுத்தி வருகின்றோம்.

பழைமைவாதம் நிறைந்த தமிழ்த் தேசியவாதமானது கடந்த காலங்களில் தாழ்த்தப்பட்ட மக்களை முஸ்லிம் மக்களையும் மலையக மக்களையும் சிங்கள மக்களையும் ஒவ்வொரு அடை மொழி மூலம் இரண்டாம் தரமாகவும் இழிவாகவும் சுட்டிக்காட் டிப் புறமொதுக்கி வந்தமை யாருவரும் அறிந்த ஒன்றாகும். கடந்த முப்பது வருட ஆயுதப் போராட்டத்திலும் அத்தகைய போக்கே முன்னின்று வந்தமை இரகசியமல்ல. இவற்றின் எதிர் விளைவுகளை இன்று முழுத் தமிழ்த் தேசிய இனமும் சுமந்து நிற்க வேண்டியதாவே இருக்கிறது. இதன் வலியும் வேதனையும் புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ்த் தேசியம் பேசுவோரு க்குப் புரிய மாட்டாது. அவர்கள் இருபது முப்பது வருடங்களு க்கு முன்பு இங்கிருந்து செல்லும் போது தம்முடன் எடுத்துச் சென்ற தமிழர் பழைமை வாத பிற்போக்கு கருத்தியல் சிந் தனை நடைமுறைகளைக் தூர வீசி எறிய முடியாதவர்களா கவே இருந்து வரும் அவலத்தையே காண முடிகிறது. அத்தகைய தமிழ்த் தேசியவாதிகளிடம் முற்போக்கான கூறு களை எதிர்பாாப்பது இயலாத ஒன்றேயாகும்.

**இனியொரு : நாடு கடந்த தமிழ்ழ அரசாங்கம் என்று சொல்ல ப்படுகிறதே இது தேவையா? இதன் ஆபத்துக்கள் யாவை? இதில் புலம் பெயர்ந்த மக்கள் செய்ய வேண்டியவை எவை?**

**பதில் :** நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பற்றி ஏற்கனவே கூறியுள்ளேன். 5/19இன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்வி க்கும் தலைமையின் அழிவிற்கும் பின்பே மேற்படி எண்ணக்கரு

புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்து வரும் புலிகள் சார்பு சில மேட்டுக்குடி உயர் வர்க்கத் தமிழரிடையே உருவாக்கப் பட்டுள்ளது. இலங்கைத் தமிழர்கள் மத்தியிலான முப்பது வருட தமிழீழத்திற்கான ஆயுதப் போராட்டமும் அதன் உச்ச நிலை அனுபவங்களும், தோல்விகளும், மக்களின் அழிவுக ளும், தரும் பாடம் யாதெனில் அத்தகைய நாடு கடந்த அரசாங்கம் தேவையற்றது மட்டுமன்றி மேன்மேலும் நமது மக்களுக்கு அபாயங்களை தோற்றுவிக்கக் கூடியது மாகும். இன்றுள்ள நிலையைவிட தமிழ் சிங்கள மக்களிடையே மேலும் இனஉறவுகளை விரிவடையச் செய்யவும் மோதலும் இரத்த ஆறு மீண்டும் ஓடவுமே மேற்படி தீர்மானம் வழி வகுக்கும். அவை மட்டுமன்றி ஒரு நியாயமான அரசியல் தீர்வுக்குரிய கோரிக்கைகளை முன்வைத்து பரந்துபட்ட தமிழ் மக்களை ஐக்கியப்படுத்தி முன்னெடுக்கவுள்ள எதிர்கால வெகு ஜனப் போராட்டத்தை திசைதிருப்பவும், சிங்கள மக்கள் அதனை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்பதுடன் தொடர்புபடுத்தி தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிராகரித்து தனிமைப்படுத்தவும் பௌத்த சிங்கள ஆளும் வர்க்க சக்திக ளுக்கே மேற்படி முடிவும் செயற்பாடுகளும் உதவக் கூடியதா கும்.

இத்தகைய ஒரு சூழல், முப்பது வருடகால யுத்தம் - போராட் டம் என்பனவற்றால் சகல நிலை அழிவுகளையும் பெற்று அதனின்று மீள முடியாது உள்ள தமிழ் மக்களுக்கு 'இது' தேவையா என்று ஆழச் சிந்தித்துப் பார்ப்பது அவசியம். அவ்வாறு பார்ப்போமேயானால் 'அது' நமது மக்களுக்குத் தேவை இல்லை என்ற ஏகோபித்த முடிவிற்கே வரமுடியும். நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்னும் அழிவுகரமான சிந்தனைப் போக்கையும் முடிவையும் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் உறுதியாக எதிர்த்து நிராகரிக்க வேண்டும். அதே வேளை இலங்கையில் தமிழ் மக்கள் கடந்த முப்பத்து மூன்று வருடகாலப் பட்டறிவின் ஊடாகப் பெற்ற அனுபவத்தைக் கொண்டு தமது தலை விதியைத் தாமே தீர்மானிப்பதற்கான சூழலை உருவாக்க புலம் பெயர்ந்த மக்கள் தமது ஆதரவை

வழங்க வேண்டும். நியாயமான அரசியல் தீர்வுக்கான ஒரு பொது வேலைத்திட்டத்தை உருவாக்குவதற் கும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் வெறுமனே பாராளுமன்ற பாதையிலான கொள்கைக்குப் பதிலாக ஐக்கியம், ஜனநாயகம், சமத்துவம், சமூக நீதி என்பனவற்றை உள்ளடக்கிய வடக்கு கிழக்கு மக்களின் அடிப்படை அபிலாஷைகளை வெளிப்படுத்தக் கூடிய அரசியல் பொதுவேலைத் திட்டம் உருவாக்கப்படல் வேண்டும்.

இத்தகைய ஒரு பொது வேலைத்திட்டத்திற்கு புலம் பெயர்ந்த தமிழர்கள் தமது ஆதரவையும் பங்களிப்புக்களையும் நேர்மையாகவும் உறுதியாகவும் வழங்க வேண்டும். இதற்கு ஒத்துழைக்காதவர்கள் இருப்பின் நன்மை செய்யாது விட்டாலும் தீமை யாவது செய்யாது இருப்பார்களேயானால் அதுவே இலங்கைத் தமிழர்களுக்குச் அவர்கள் செய்யும் உதவியாக இருக்க முடியும்.

**இனியொரு: வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் தான் தமிழ் மக்களுக்குத் தீர்வு என்று தமிழ்த் தேசியவாதிகள் அடம் பிடிக்கிறார்களே இது சாத்தியமா?**

**பதில்** :இவ்வாறு தொடர்ந்து அடம் பிடிக்கும் தமிழ்த் தேசியவாதிகள் இருப்பார்களேயானால் அத்தகையோர் ஒன்றில் முட்டாள்களாக அல்லது அறிவீலிகளாகவே இருப்பர். இவர்கள் வரலாறோ இன்றைய அரசியல் யதார்த்தமோ அல்லது சர்வதேச ஏகாதிபத்திய சக்திகளின் சதி நோக்கங்கள் பற்றியோ அறியாத அப்பாவிகளாகவே இருப்பர். இவர்களது மூளையில் பதிந்து கெட்டியாகி இருப்பது தமிழர் பழைமைவாத ஆண்டபரம்பரை ஆதிக்கக் கருத்தியலும் சிந்தனை நடைமுறைகளுமேயாகும். இவற்றை ஏற்கனவே ஒட்டுமொத்த வடக்கு கிழக்கு மக்கள் அனுபவித்த பின்பும் அல்லது அவலங்களுக்குள் உழலும் இன்றைய நிலையிலும் தமிழ்த்தேசிய வாதிகளின் அடம் பிடித்தலுக்கு எவ்வித அர்த்தமும் இருக்க முடியாது.

**இனியொரு: இன்று எமக்குத் தேவை ஒரு அடிப்படை வேலைத் திட்டம். அதை எப்படி உருவாக்குவது. இலங்கையில் இருக்கும்**

**நீங்கள் அதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறீர்களா? அவை பற்றியும் ஜனநாயக முற்போக்கு சக்திகள் பற்றியும் கொஞ்சம் சொல்லுங்கள்.**

பதில் : இன்று தமிழ்த் தேசிய இனத்திற்கும் ஏனைய ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும் தேவைப்படுவது அடிப்படையான அரசியல் பொது வேலைத்திட்டமாகும். இத்தகைய பொது வேலைத்திட்டம். இரண்டு பகுதிகளை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும். ஒன்று உடனடியாக நிறைவேற்ற வேண்டிய கோரிக்கைகளைக் கொண்ட வேலை த்திட்டமாகும். இரண்டாவது. அரசியல் தீர்வை உள்ளடக்கிய நீண்டகால வேலைத் திட்டமாகும். இவை இரண்டும் சமகாலத்தில் வடக்கு கிழக்கின் தமிழ் மக்கள் மத்தியிலும் முஸ்லீம் மக்கள் மத்தியிலும் முன்வைக்கப்படுவது அவசியமாகும். இதில் காலதாமதம் காட்டக் கூடாது. எமது கட்சியைப் பொறுத்தவரை இவ்விடயத்தில் ஏற்கனவே அதற்கான முன் முயற்சிகளை எடுத்திருந்தது. உடனடிவேலைத் திட்டம் ஒன்றினை உருவாக்கும் நோக்குடன் கடந்த 13.6.2009ல் பத்து அம்சக் கோரிக்கையினைத் தயாரித்து சகல தமிழர் தரப்பு முஸ்லீம் கட்சிகளுக்கும் ஜனநாயக முற்போக்கு கட்சிகள் அமைப்புகளுக்கும் அனுப்பி வைத்து அதனை ஊடகங்கள் வாயிலாகவும் வெளிப்படுத்தியிருந்தோம். சில கட்சித் தலை மைகளோடு இது பற்றிக் கலந்துரையாடி பொது இணக்கப் பாட்டிற்கு வர முயற்சிகள் எடுத்தோம். அதனடிப்படையில் சில கட்சிகளுடன் சந்தித்துப் பேசவும் செய்தோம். வேறு சில கட்சிகள் அவ்வாறு சந்தித்துப் பேசுவதை விரும்பவில்லை. காரணம் தமிழர் தரப்புக் கட்சிகளாயினும் மற்றையவர்களும் அடுத்துவர இருக்கும் பாராளுமன்றத் தேர்தலைக் குறிவைத்துச் செயல்படுபவர்களாகவே காணப்படுகின்றனர். ஏதாவது பொய்யை புழுகைக் கூறி அல்லது பழிமுழுவதையும் புலிகள் இயக்கத்தின் மீது சுமத்திவிட்டு தமது பழைய பாதையில் செல்வதையே அவர்கள் அடிப்படை நோக்காகக் கொண்டே செயல்படுகின்றனர். நாம் எவ்வளவிற்கு உளத் தூய்மையோடு ஒரு பொது வேலைத்திட்டத்திற்கு முயன்றாலும் தமிழ்த் தேசிய வாதத் தலைமைகள் அத்தகைய நிலைக்கு வரத் தயாராக

இல்லாத நிலை தான் காணப்படுகிறது. இங்கே பழைமைவாத ஆதிக்க அரசியலைப் பாராளுமன்றப் பாதையில் தொடர்வதையே அவர்கள் முன்நிறுத்தி வருகிறார்கள் இருப்பினும் எங்கள் கட்சி தமிழ் மக்கள் மத்தியிலும் ஜனநாயக முற்போக்கு சக்திகளிடையேயும வெகுஜன மட்டங்களில் அணுகி இத்தகையதொரு பொது வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதில் உறுதியாக இருந்து செய்றபட்டு வருகிறது. அதற்கான முன்முயற்சிகளை நடை முறை வேலைகளாக முன்னெடுக்கவும் செய்கிறது. இத்தனை அழிவுகள் அவலங்களுக்குப் பின்பும் தம்மை எவ்வகையிலும் சுயவிமர்சனத்திற்கும் மறு மதிப்பீட்டிற்கும் உள்ளாக்காது பழைமைவாதத் தமிழ்த் தேசியவாதப் பாதையில் மக்களை அழைத்துச் செல்ல ஒரு பிரிவினரும், பேரினவாத அரசாங்கத்துடன் இணங்கிப் போய் சலுகைகள் பெற்று அரசியல் நடாத்த மறுபிரிவினரும் முயன்று வருகின்றனர். எமது கட்சி இவற்றுக்கு அப்பாலான மூன்றாவது சக்தியாகவும் மாற்று அரசியல் மார்க்கத்திலும் பயணிக்கவே முன் நிற்கிறது. இதில் பரந்துபட்ட ஐக்கியத்தையே நாம் கோரி நிற்கின்றோம். இதற்கு சொந்த மண்ணிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் அனைத்து மக்களினதும் அறிவு பூர்வமானதும் ஆக்கபூர்வமானதுமான ஆதரவையும் ஒத்துழைப் பையும் வேண்டி நிற்கின்றோம். அத்துடன் சிங்கள முஸ்லீம் மலையகத் தேசிய இனங்கள் மத்தியில் உள்ள ஜனநாயக முற்போக்கு இடதுசாரி அரசியல் சக்திகளையும் அணுகி கலந்துரையாடி வருகின்றோம்.

**இனியொரு: நீங்கள் சார்ந்து இருக்கும் புதிய ஜனநாயக கட்சி பற்றி இப்போது தான் நாம் கேள்விப்படுகி றோம். எனவே உங்கள் கட்சி பற்றியும் உங்களது சாதனைகள் வேலைத்திட்டங்கள் பற்றியும் சொல்லுங்கள்.**

பதில் :எமது புதிய-ஜனநாயக கட்சி 1978ம் ஆண்டு யூலை மாதம் 3ந் திகதி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்னும் பெயரில் உருவாக்கப்பட்ட மாக்சிச லெனினிச மாஓ சேதுங் சிந்தனை அடிப்படையில் உருவாக்கப்பட்ட கட்சியாகும். இது தோழர் நா.சண்முகதாசன் தலைமையில் 1964இல் உரு

வாகிய மாக்சிச லெனினிசக் கட்சியின் தொடர்ச்சியில் உரு வாகிய கட்சியாகும். இலங்கையின் பொதுவுடைமை இயக்க முன்னோடி களில் ஒருவரான மறைந்த தோழர் கே.ஏ.சுப்பிரம ணியம் (மணியம்) இதன் முதலாவது பொதுச் செயலாளரா கவும் அதன் பின் தோழர். சி.கா. செந்திவேல் பொதுச் செய லாளராகவும், தோழர் இ.தம்பையா தேசிய அமைப்பாளராகவும் இருந்து வருகின்றனர். 1991இல் நடைபெற்ற கட்சியின் இரண்டா வது தேசிய மாநாட்டில் கட்சியின் பெயரை புதிய ஜனநாயகக் கட்சி எனப் பெயர் மாற்றம் செய்து கொண்டது. கம்யூனிஸ்ட் கட்சி என்னும் பெயரில் இழைக்கப்பட்ட தவறுகள், பாராளுமன்ற சந்தர்ப்பவாதத் தவறுகள், திரிபுவாத நிலைகள், தமிழ் மக்கள் மத்தியில் தேடப்பட்ட அவப்பெயர்கள் எல்லாம் அதே பேரில் நாம் சுமப்பதை விரும்பவில்லை. பெயரில் மட்டும் மாற்றம் ஏற்படுத்தப்பட்ட தேயன்றி அதன் அடிப்படைத் தத்துவா ர்த்த கொள்கை நடைமுறை வேளைகளில் எவ்வித மாற்றங் களும் ஏற்படுத்தப்ப டவில்லை. எமது இப் புதிய ஜனநாயக கட்சி கடந்த முப்பத்தி யொரு வருடங்களாக வடக்கு கிழக்கில் மலையகத்தில் கொழும்புப் பிரதேசங்களில் தனது வேலைகளை முன்னெடுத்து வந்துள்ளது. 1966-71 காலப்பகுதியில் இடம்பெற்ற வெகுஜனப் போராட்டங்களிலும், தொழிற்சங்கப் போராட்டங்களி லும் பங்கு பற்றிய கிராமங்களும் மக்களும் தொழிலாளர்களும் நகரப் புறத்து புத்திஜீவிகளும் எமது கட்சியின் வாழ்வோடும் வேலை முறைகளோடும் இணைந்து செயல்பட்டு வந்துள்ளனர். இதில் முக்கியத்துவம் யாதெனில் கடந்த முப்பது வருட வடக்கு கிழக்கின் ஜனநாயக மறுப்பு அராஜக சூழலிலும் எமது கட்சியின் வேலையானது மேற் கூறிய மக்களுடன் ஐக்கியப்பட்டு முன்னெடுப்பதாகவே இருந்து வந்துள்ளது. சில கிராமங்கள் முற்று முழுதாகவே எந்தவொரு தமிழ்த் தேசிய வாத இயக்க மிரட்டலுக்கும் அடிபணியாது செயல்பட்டு வந்து ள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதனால் சங்கானையில் கட்சி தோழரான சி. துரைசிங்கத்தை இழக்கவும் ஏனைய பல தோழர்கள் அச்சுறுத்தல் கொலைகளில் இருந்து தவறவும் தலைமறைவு வாழ்க்கை வாழவும் வேண்டிய சந்தர்ப்பங்கள்

ஏற்பட்டன. 1987ல் இந்திய ராணுவம் வடக்கு கிழக்கில் அமைதிப்படை என்னும் பெயரில் நிலை கொண்டிருந்த காலச் சூழலில் எமது கட்சி இந்திய ராணுவம் வெளியேற வேண்டும் என வற்புறுத்தி வந்தது. 1989ம் ஆண்டு மேதினத்தையும் யாழ் நகரில் வெற்றிகரமாக நடாத்தியது. அந்நிகழ்வின் மறு நாள் அம் மேதினக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய கட்சியின் அன்றைய பொதுச் செயலாளர் தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தை கொல்வதற்கான ஒரு உத்தரவு வன்னிக் காட்டின் புலிகளின் தலைமைப் பீடத்தில் இருந்து பிறப்பிக்கப்பட்டதென ஒரு தக வலை எமது கட்சித் தலைமை பெற முடிந்தது. உடனடி செயற்பாட்டின் காரணமாக தோழர் மணியம் பாதுகாக்கப்பட்டு மலையகத்தின் ஒரு நகரான கண்டியில் தலைமறைவு வாழ் வுக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அங்கிருந்தே அவர் செயல்பட வேண்டியதாயிற்று. அங்கு அவர் ஏழு மாதங்கள் சுகவீனத் தோடு தலைமறைவாக இருந்த போதே மரணமடைந்தார். இவை போன்ற பல்வேறு சோதனைகள் வேதனைகள் மத்தியில் கட்சி தனது சொந்த நிலைப்பாட்டை இழக்கவோ எந்தவொரு தமிழ்த் தேசியவாத ஆயுத இயக்கங்களுக்கும் பின்னால் செல் லவோ இல்லை என்பது தான் எமது கட்சிக்குரிய புரட்சிகர நிலைப்பாடாகும். நாம் பேரினவாத ஒடுக்குமுறையை எதிர் த்து நின்ற போது எமக்கு புலி முத்திரை குத்த சிலர் முயன்ற னர். அதே வேளை பிரிவினையையும் ஜனாநயக விரோதங் களையும் எதிர்த்த சந்தர்ப்பங்களில் அரசாங்க சார்பு எனக் கூறி துரோக முத்திரை குத்த சில முயன்றனர். ஆனால் நமது கட்சி நிதானத்துடன் மாக்சிச லெனினிச அடிப்படையி லான மக்கள் சார்பு நிலைப்பாட்டையே கொண்டிருந்தது. இதனை இலங்கையிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் உள்ள நேர்மை யான அரசியல் அக்கறையாளர்கள் நன்கு அறிவர். நெருக்கடிகள் அச்சுறுத்தல்கள் மிரட்டல்கள் மத்தியில் எமது கட்சியோடு உறுதியாக நின்ற மக்களும் தொழிலாளர்களும் புத்திஜீவிகளும் கிராமங்களும் வரலாற்றில் என்றும் நினைவு கூரப்படவேண்டியவர்கள். மலையகத்தில் எமது கட்சி தனது வேலைகளை முன்னெடுத்து வெகுஜன ரீதியிலும் அரசியல் ரீதியிலும் மாற்று அரசியல் சக்தியாக வளர்ந்து வந்துள்ளது. எமது கட்சியின் தேசிய அமைப்பாளர் இ.தம்பையா மலையகத்

தைச் சேர்ந்த தோழராவார். அங்கு மக்களின் வற்புறுத்தலால் சிங்கள உறுப் பினர்களை அதிகமாகக் கொண்ட வலப்பனை பிரதேச சபைக்கு தெரிவுசெய்யப்பட்ட எமது கட்சியின் மலையகப் பிரதேசச் செயலாளர் தோழர் ச.பன்னீர்செல்வம் உறுப்பினராக இருந்து மக்களுக்கு முடிந்த சேவையை வழங்கி வருகிறார். மலையகத் தில் அரசியல் விழிப்படைந்து வரும் தொழிலாளர்கள் ஆசிரிய ர்கள் மாணவர்கள் என்போர் கட்சியின் வேலைகளை அர்ப்பணி ப்போடு முன்னெடுத்து வருகின்றனர். அந்தவேலை முறையி னைத் தாங்க முடியாது ஐந்து கட்சித் தோழர்கள் கடந்த இரண்டரை வருடங்களாக அவசரகால சட்டத்தின் கீழ் சிறைகளில் அடைக்கப்பட்டனர். அதில் மூவர் இரண்டு வருட ங்கள் கழித்து அண்மையில் விடுவிக்கப்பட்டனர். இரு தோழ ர்கள் தொடர்ந்தும் சிறையில் இருந்து வருவதுடன் கடந்த எட்டு மாதங்களாக வவுனியாவிலிருந்தும் எமது கட்சித் தோழர் ஒருவரை சிறையில் தடுத்து வைத்துள்ளனர்.

எமது புதிய ஜனநாயக கட்சி எப்போதும் சரியான இலக்குக ளைத் தேர்ந்தெடுத்த வேலைத் திட்டங்களுடனேயே செயல்பட்டு வந்துள்ளது. அதில் குறுகிய கால - நீண்டகால வேலைத்திட்ட ங்கள் என வகுத்தே முன்னெடுத்து வந்துள்ளது. கருத்தியல் சிந்தனை நடைமுறைகளில் தமிழ் மக்கள் தம்மத்தியில் இருந்துவரும் பழைமைவாத ஆதிக்க போக்குகளையிட்டு கேள்விகளை எழுப்புதல் வேண்டும். அதன் மூலமே மாற்று அரசியலை முன்னெடுத்து புதிய சூழலை தோற்றுவிக்க முடியும் எமது வேலைத்திட்டங்கள் சமகால சமூக முரண்பாடுகளை ஆழ ஆராய்ந்து அதன் வழியில் மாக்சிச உலக நோக்கின் ஊடான அறிவு பூர்வமான கொள்கைகளைத் தூரநோக்கில் முன்னெடுக்கும் அடிப்படைகளைக் கொண்டதாகும். வெறும் இன உணர்வேற்றி இனப்பகை மூட்டி எல்லாம் நாமே வென்று தருவோம் என்னும் தமிழ்த்தேசிய வாதப் பாதை நமது கட்சி யின் கொள்கைக்கும் நடைமுறைகளுக்கும் எவ்வகையிலும் ஒத்துவராத விடயங்களாகும். நமது நிலைப்பாடு அறிவுபூர்வ மானதும் தூர நோக்குடையதும் மக்களை விடுதலைப் பாதை யில் மக்கள் போராட்டங்களால் அழைத்துச் சென்று வெற்றி பெறும் மார்க்கமுடையதாகும். இங்கே அழிவுகரமான அரசிய

லுக்கும் தனிநபர்களின் வீரதீரத்திற்கும் இடமிருக்க முடியாது. மக்கள், மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்து சக்தி என்ற வரலாற்று உணர்வுடன் மக்களுக்கு அரசியல் அறிவூட்டி அனி திரட்டி முன்செல்வதே நமது அரசியல் வேலையின் இலக்கா கும். இதுவே சமூகமாற்றத்திற்கான போராட்டபாதை ஆகும். இலங்கையின் தற்போதைய சமூக அமைப்பானது நிலவுடைமை வழிவந்த கருத்தியல் சிந்தனை நடைமுறைகளின் நீடிப்புடன் கூடிய நவகொலனித்துவ அமைப்பாகவே இருந்து வருகிறது. இங்கு வர்க்க, இன, சாதிய, பால் ஆகிய நான்கு அடிப்படை களில் சமூக முரண்பாடுகள் வேர் கொண்டுள்ளன. இவற்றின் அடியாகவே ஒடுக்குமுறைகளும் தீவிரமடைந்து வந்துள்ளன. வர்க்க முரண்பாடும் அதன் ஒடுக்கு முறையும் அடிப்படையான தாக உள்ள அதேவேளை அதனையும் மேவிய நிலையில் கடந்த மூன்று தசாப்தங்களில் இன முரண்பாடும் ஒடுக்கு முறையும் பிரதானமான தொன்றாகி முன்னெழுந்து கொண்டன. அதனைத் தாழ் நிலைக்கு கொண்டு வருவதன் மூலமே அடிப்படை வர்க்க முரண்பாடு மேற்கிளம்பவும் துலக்கமடை யவும் முடியும் என்பதே கட்சியின் நிலைப்பாடாகும். அதே வேளை சாதிய பால் நிலை முரண்பாடுகள் ஒடுக்கு முறைகளை அவை நிலைத்துள்ள தளங்களில் நின்று போராட வேண்டியதன் அவசியத்தையும் கட்சி வற்புறுத்தி வந்துள்ளது.

மேற்கூறியவற்றுடன் ஒருபுறம் அமெரிக்க மேற்குலக ஏகாதிபத் திய சக்திகளும் மறுபுறம் இந்திய பிராந்திய மேலாதிக்க சக்திகளும் தத்தமது செல்வாக்கின் கீழ் இலங்கையை வைத்து பொருளாதார ராணுவ அரசியல் ஆதிக்கப் பிடிகளைக் கொண் டிருக்க முனைந்து நிற்கின்றனர். இதில் அவர்கள் ஏற்கனவே தமது பிடிகளை வலுப்படுத்தியும் வந்துள்ளனர். இதில் தேசிய இனப் பிரச்சினை அவர்களுக்கு வசதியான களமாக இருந்து வந்துள்ளது. இவற்றையெல்லாம் கவனத்திலும் அக்கறையிலும் எடுத்துக் கொள்ளாது எவரும்.செயல்பட முடியாது. மேற்கூறிய இவ்விரு சக்திகளை நம்பியோ அல்லது அவர்களை எதிர் பார்த்து தங்கியிருந்தோ தமிழர்கள் தமது கோரிக்கைகள் எதையும் வென்றெடுக்க முடியாது. இதற்கான போதிய

வரலாற்று அனுபவமும் பட்டறிவும் தமிழ் மக்கள் முன்னே விரிந்து கிடக்கின்றன.

**இனியொரு: அண்மையில் தமிழ் நெற் இணையத்தளம் எழுதிய ஆசிரிய தலையங்கத்தில் உங்கள் கட்சியை இலக்கு வைத்து எழுதியிருப்பது பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

பதில் : தமிழ் நெற் இணைய தளத்தின் அடிப்படை நோக்கமும் அதன் பரப்புரைகளும் யார் பக்கம் இருந்து வந்தன என்பது எல்லோரும் அறிவார்கள். அவர்களது நம்பிக்கைகளும் எதிர் பார்ப்புகளும் தகர்ந்து போன நிலையில், மாக்சிச லெனினிய வாதிகள் கூறிவந்த உண்மைகளின் பக்கம் மக்களின் கவனம் திரும்பி வருவதைப் பொறுக்க முடியாத நிலையிலேயே லெனினிச வாதிகள் "உள்ளக சுயநிர்ணயத்தை" ஆதரிப்பதாகவும் "நல்ல இடதுசாரிகள்" பிரிவினையை ஆதரிப்பதாகவும் பம்மாத்துப் பரப்புரை செய்துள்ளது. உள்ளக சுயநிர்ணயத்தை மாக்சிச லெனினிச வாதிகள் ஆதரிக்கிறார்கள் எனத் தமிழ் நெற்றுக்கு யார் அறிக்கை செய்தார்கள்? அடுத்து பிரிவினையை ஆதரிக்கும் அந்த நல்ல இடதுசாரிகள் யார்? சுயநிர்ணய உரிமை பற்றிய எண்ணக் கருவை தோற்றுவித்து நடைமுறைப்படுத்தி வெற்றி காண்பதில் தோழர் லெனின் சர்வதேசப் பங்களிப்பை வழங்கினார். மாக்சிச உலக நோக்கினதும் தேசிய இனங்களின் வரலாற்று வளர்ச்சியினையும் கொண்டே லெனின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை வரையறை செய்தார். அது சோஷலிசத்தை நோக்கிய ஒரு ஜனநாயகக் கோட்பாடாகும். சுயநிர்ணய உரிமை என்பதற்கு உரிய பிரதான விளக்கம் தேசிய இனங்களிடையே சமத்துவத்தை வற்புறுத்துவதாகும். அதனை வற்புறுத்தும் வகையிலேயே பிரிந்து செல்லும் உரிமையையும் இணைக்கப்பட்டது. அதற்கான ஒரு உதாரணமாகவே திருமணச்சட்டம் காட்டப்பட்டது. பிரிந்து செல்வதற்கான உரிமை என்பது இருவருக்கும பொதுவானதும் சமத்துவத்தை வற்புறுத்துவதுமாகும். பிரிந்து செல்லும் உரிமையானது சமத்துவத்தையும் ஐக்கியத்தையும் உத்தரவாப்படுத்துவதே அன்றி பிரிந்து செல்வதை மட்டும் கோருவதல்ல என்பது சுயநிர்ணய உரிமையில் காண

வேண்டிய பிரதான அம்சமாகும். அத்தகைய பிரிந்து செல்லும் உரிமையினை எந்த வர்க்கம் எத்தகைய நோக்கங்களுக்காக செயற்படுத்த நிற்கிறது என்பது அடிப்படையில் நோக்கப்பட வேண்டியதாகும். எனவே சுயநிர்ணய உரிமை சமன் பிரிவினை என்பது வாய்ப்பாடாகாது. மேலும் உள்ளக சுயநிர்ணய உரிமை என்பது மாக்சிச லெனினிசவாதிகளால் ஏற்றுக் கொள்ள முடியாததாகும். அது லெனின் கோட்பாட்டை மறுப்பதற்காக அமெரிக்க கொள்கை வகுப்பாளர்களால் தமக்கு அளவானதாகக் கண்டு பிடிக்கப்பட்ட போலித்தனம் நிறைந்த ஒன்றாகும். எனவே சுயநிர்ணய உரிமையை வற்புறுத்துவதில் உள்ளகம் வெளியகம் என எதுவும் இல்லை. தமிழ் நெற்றும் அதன் கொள்கை வகுப்பாளர்களும் யாருடைய நலன்களுக்காக செயற்படுகிறார்கள். ஏகாதிபத்தியத்தினதும் அவர்கள் மீது என்றென்றும் அடிமை விசுவாசத்துடன் இருந்து வரும் தமிழ் மேட்டுக் கூடி உயர் வர்க்கத்தினர்க்காகவா? அல்லது பரந்து பட்ட தமிழர்களான தொழிலாளர் விவசாயிகள் மீனவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் பெண்கள் மற்றும் கீழ் மத்தியதர வர்க்க அரசாங்க தனியார் துறைகளைச் சேர்ந்த மக்களுக்காகவா? இதுவே இன்று தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள உள்ள பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டின் மீதானமையக் கேள்வியாகும். இலங்கையிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் இதனை தமிழ் மக்கள் புரிந்து கொள்வது அவசியமானதாகும்.

---

நேர்காணலுக்கான தொடுப்பு (URL) :
http://inioru.com/?p=4755

பின்னூட்டம் வழியாகக் கேள்வி கேட்டவர்கள் : manoharan| mathan| thiru| Yaathavan | Irai Venthan



**மாற்று** அரசியல் சக்தி என்பது தமிழ் மக்கள் மத்தியில் தோற்றுவிக்கப்படல் வேண்டும். அத்தகைய ஒரு சூழ்நிலையைத் தனி ஒரு கட்சியாலோ சில தனிநபர்களாலோ தோற்று விக்க முடியாது. முதலில் இதுவரையான ஆதிக்க அரசியலுக்குப் பதிலான ஜனநாயக த்தை முன்னுறுத் தும் வகையிலான அரசியல் நிலைப்பாடு தோற்றுவிக்கப்படல் வேண்டும். தமிழர் மத்தியிலான நிலவுடைமைக் கருத்தியல் சிந்தனை நடைமுறைகளைத் தகர்க்கக் கூடியதான மாற்று அரசியலாகவே அந்த ஜனநாயகம் அமைய வேண்டும். இன வர்க்க, சாதிய, பால் முரண்பாடுகளை மூடி மறைக்காது, அவற்றுக்கான கோரிக்கைகளையும் அரசியல் தீர்வுக்கான கோரிக்கையில் இடம்பெற வைப்பதே அந்த ஜனநாயக அரசியலாக இருக்க முடியும். ஜனநாயகம் என்பது ஏகப்பெரும்பான் மையான மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டுமே அன்றி, ஆண்ட பரம்பரைக் கருத்தியல் கொண்டு ஜனநாயக முகமூடி தரித்த ஒரு சிலரின் விருப்பு வெறுப்பிற்கு உட்பட்டதாக அமையக் கூடாது. கடந்த முப்பது வருடகால உயிரிழப்புக்களினூடும் இரத்த வழிந்தோடல்களினூடும் இழப்புக்களினூடும் துயரங்களினூடும் இன்று அனுபவிக்கும் பேரவலங்களினூடுமான பட்டறிவை அரசியல் அனுபவமாகக் கொண்டே மாற்று அரசியல் தோற்றுவிக்கப்படல் வேண்டும். இந்த மாற்று அரசியல் என்பது வெறுமனே ஆட்களை மாற்றி அவர்களின் இடத்திற்குப் புதியவர்கள் வருவதல்ல. கருத்தியல், சிந்தனை, நடைமுறையில் அடிப்படையான மாற்றம் அவசி யமாகும். அதன் மூலமான மக்கள் ஜனநாயக அரசியல் முற்போக்கான பாதையிலும் பாராளுமன்ற அரசியலுக்கான் தாக மட்டுமன்றி வெகுஜன அரசியலுக்கானதாகக் கட்டமைக் கப்பட வேண்டும்.